விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஐப்பசி 12 முஹறம் 22 இதழ் 258

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-10-83

1983.10.29

யாழ். இந்து, மானிப்பாய் இந்துக்கல்லூரி

## மாணவர் வரவு இடாப்புகளை இளைஞர்கள் அபகரித்தனர்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் இரு கல்லூரிகளிலிருந்து மாணவர் வரவு பதியும் இடாப்புக்களை துப்பாக்கி முனையில் இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்று நேற்று அபகரித்துச் சென்றுள்ளது!

யாழ். இந்துக் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலுமே இந்த வரவு இடாப்புக்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரிக்குள் நேற்றுக் காலை புகுந்த மூன்று இனந்தெரியாத இளைஞர்கள், அங்குள்ள காரியாலயத்தினுள் இருந்த தொலைபேசியை அறுத்தெடுத்து நிலத்தில் போட்டு உடைத்தார்களாம். அந்நேரம் இளைஞரில் ஒருவர் தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டு, பயமுறுத்தி கல்லூரி

(10-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்னை: உலக நாடுகளின் பிரதிநிதிகள் நியூயோர்க்கில் 31ல் கூடுகின்றனர்

நியூயோர்க்

இலங்கைத்தமிழர் பிரச்னை பற்றி விவாதிப்பதற்காக உலக நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டமொன்றிற்கு தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் பன்ருட்டி எஸ் ராமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இக்கூட்டம் நாளை மறுதினம் 31-ம் திகதி நியூயோர்க்கில் நடைபெறுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஐ. நா. சென்ற இந்தியக் குழுவில் இடம்பெற்ற திரு. ராமச்சந்திரன் தற்போது நியூயோர்க்கில் தங்கி, பல் வேறு உலக நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி அவர்களுக்கு விளக்கி வருகிறார்.

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஐ. நா. விலும் திரு. எஸ். ராமச்சந்திரன் உரையாற்றியிருந்தது தெரிந்ததே. (வெ)

# "நிபந்தனையின்றி தலைவர்களை அழைத்து வட்டமேசை மாநாடு கூட்டுக!"

## தமிழகசட்டசபை தீர்மானம்

(சென்னை)

**"இலங்கைத் தலைவர்கள் அனைவரையும் நிபந்தனையேதும் விதிக்காது வட்டமேசை மாநாட்டிற்கு அழைத்து, அவர்களுடன் பேச்சுக்களை நடத்தி, இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை கோரும் தீர்மானம் தமிழ்நாடு சட்டசபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.**

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த மீண்டும் இந்தியப் பிரதமர் • திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியை கொழும்புக்கு அழைப்பதென்ற இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் முடிவுக்கும் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## திருமலை இடைத்தேர்தல்: கூட்டணி மறுபரிசீலனை?

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை இடைத் தேர்தலை பகிஷ்கரிப்பது என்ற திருமலைத்தொகுதியின் கூட்டணிபொதுச்சபைமுடிவுபற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படவிருப்பதாகக் கூட்டணி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

உத்தியோகத்திற்காக ஏற்கனவே சத்தியப்பிரமாணம் செய்த சட்டத்தரணி, ஆசிரியர் அரசாங்க ஊழியர்களில் ஒருவரை தமிழ்மக்களின் பொது வேட்பாளராக திருமலையில் சுயேச்சையாக நிறுத்துவது பற்றி ஆலோசிக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதேநேரத்தில் இவர் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் பாராளுமன்றம் சென்று சத்தியப்பிரமாணம் செய்ய மாட்டார் என்றும் கூறப்படுகிறது. (க)

## "பார்த்தசாரதியின் பயணம் வெற்றிகரமாக முடியும்"

### தமிழக முதல்வர் நம்பிக்கை

[சென்னை]

"இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக மீண்டும் இலங்கை செல்லவுள்ள இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியின் பயணம வெற்றிகரமாக முடியும்"

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுச் சட்டசபையில் இலங்கைத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடைபெற்ற விவாதத்திற்கு இரண்டாவது முறையாகப் பதிலளித்து உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாணப்பட்ட பின்னரே அ.தி.மு.க. உறுப்பினர்கள் சட்ட சபைக்கு கறுப்புச் சட்டை அணிந்து வருவதை நிறுத்திக் கொள்வார்கள்.

"தமிழ் நாட்டில் இலங்கைத் தீவிரவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்படுவதா

(10ம்- பக்கம் பார்க்க)

## மகளிர் கல்லூரிகளிலும் வரவு கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மகளிர் கல்லூரிகளிலும், நீண்டகாலம் வராத உயர்வகுப்புமாணவிகள் பற்றி விபரம் சேகரிக்கப்பட்டுவருகிறது.

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) மீட்டல் வகுப்பு ஆகியவற்றில் பயிலும் மாணவிகளில் நீண்டகாலம் வராத மாணவிகள் பற்றிய விபரங்களை கல்வி இலாகா மகளிர் கல்லூரி அதிபர்களிடமிருந்தும் கோரியுள்ளது.

உயர்வகுப்பு மாணவிகளில் கடந்தசிலமாதங்கள் ஒழுங்காக வந்தவர்கள், திருப்திகரமற்ற முறையில் வந்தவர்கள், வராதவர்கள் பற்றிய விபரம் கேட்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் மகளிர் பாடசாலைகளுக்கு இரகசியபொலிசார் சென்று உயர்வகுப்பு மாணவிகளின்

[10ம் பக்கம் பார்க்க]

## பஸ் விபத்து: 8 பேர் பலி 11 பேர் படுகாயம்

### நிக்கவெரட்டியவில் சம்பவம்

[கொழும்பு]

நிக்கவெரட்டியாவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த பங்கர பஸ்விபத்தொன்றில் எட்டுப் பேர் பலியானார்கள். 11 பேர் படுகாயமடைந்தனர்.

தென்னைமரமொன்றில் பஸ் வண்டி மோதியதையடுத்தே இக்கோர விபத்து ஏற்பட்டது. விபத்துக்குள்ளான பஸ் வண்டி மொறட்டுவவைச் சேர்ந்தது. அதில் மொறட்டுவ மத்திய பஸ் டிப்போ ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவருமே பயணஞ்செய்தனர்.

காயமடைந்தவர்கள் நிக்கவெரட்டிய, குருநாகல் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலைகவலைக்கிடமாகவுள்ளது. [கி]

## அளவெட்டி அடகு நிலையம்: ரூ. 3லட்சம் நகை கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

"நாங்கள் இராணுவத்தினர்! வீட்டுக்குள் துப்பாக்கிகள் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. வீட்டைச் சோதனையிடப் போகின்றோம்" என்று நள்ளிரவில் தனியார் அடைவுபிடிக்கும் நிலையம் ஒன்றுக்குள் சீருடையில் நுழைந்த எட்டுப் பேர் கொண்ட இனந்தெரியாத கோஷ்டியொன்று துப்பாக்கி முனையில் பெரும் கொள்ளையை நடத்திவிட்டு மறைந்துவிட்டது! மூன்று லட்சம் ரூபா பெறுமதியான இநதக் கொள்ளை அளவெட்டி வடக்கில் முத்துத்தம்பி நடராஜா என்பவருக்குச் சொந்தமான அடைவுபிடிக்கும் நிலையத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்துள்ளது. சுன்னுகம் பொலிஸில் செய்யப்பட்ட புகாரிலிருந்து இந்த விபரங்கள் தெரியவந்துள்ளன.

இதற்கு முன்னர் இக்கோஷ்டியினர், "அடைவு பிடிக்கும் நடராசா வீடு எங்கே இருக்கிறது?" என்று அங்குள்ள சில வீடுகளில் தட்டி எழுப்பி விசாரித்தார்களாம்!

குறிப்பிட்ட வீட்டில்உள்ளே நுழைந்தவர்களில் இருவர், துப்பாக்கி முனையில் உரிமையாளரைப் பயமுறுத்தி, அடைவு பிடிக்கும் இடத்திற்குக்கூட்டிச் சென்று நகைகள் வைக்கும் இரும்புப் பெட்டியைத் திறக்

(10ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் கலாசாலை வீதியில் மின்சார வசதியுள்ள வீடு கட்டக்கூடிய 2, 3 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு S. பொன்னுத்துரை, நல்லூர் எம். பி. காரியாலய ஒழுங்கை, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 9564

மிகவும் நல்ல நிலையில் உள்ள டிலிக்கா 34 ஸ்ரீ தொடரில் 1976-ம் வருட மொடல் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 'மற்று இல்லம்', அரசடி வீதி (சிமெந்துத் தொழிற்சாலை பிரதான வாயில் முன்பாக உள்ள வீதி), மாவிட்டபுரம் வடக்கு, தெல்லிப்பழை. 9568

கச்சேரி, தபாற் கந்தோர்' பிரபல கல்லூரிகள் ஆகியவற்றிற்கு அண்மையில் வீடு கட்டு கட்டுவதற்கு ஏற்ற 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 64, கண்டி வீதி, சுண்டிக்குழி. 9569

தேக்குத் தளபாடம் (Teak Drawing room suite with foam Cushions) விற்பனைக்கு உண்டு. 127, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டிக்குளி. 9558

யாழ். நகரில்- ஆட்டுகல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுகல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக்கர் அன்கோ, 112, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 9506

ஆனைக்கோட்டைக்கும் ஆறுகால் மடத்திற்கும் இடையில் கொக்குவில் போகும் றோட்டில் பிடாரி கோவில் உபதபால் நிலையத்திற்கு அருகில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு உகந்தநிலம். விபரங்களுக்கு: நாதன் ரெக்ஸ்ரைல்ஸ், 179, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23601. (9503)

## சேவை

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்தமுறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ரூடியோவை நாடுங்கள். 9145

## தேவை

மணமகன் தேவை. இந்து வேளாள குல மணமகளிற்கு 40-ல் இருந்து 45 வயதிற்கு உட்பட்ட மணமகன் தேவை. உயர் பதவில் உள்ளோர் விரும்பப்படுகின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். முதற் கடிதத்தில் குறிப்புடன் சகல விபரங்களையும் அறியத் தரவும். விளம்பர இல: 9567 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9567

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். டெலிபோன்: 23336. (9511)

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/- ரூபாவுக்கு மேற்பட்ட பல விலைகளில் கோழிகளை நேரடியாக வந்து கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், Phone: 23131. (9551)

## TOLET

Chundikuli, House / Annex partly completed in residential area. Close to Schools, Kachcheri, Post Office, Bus stand, available on advance for completion. Terms negotiable. Enquire Vethanayagam 11, Kachcheri Nallur Road, (Behind Chundikuli Post Office.) 9500

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதியில் புதிதாகஅமைக்கப்பெற்ற 760, 761/1இரண்டு கடைகளும் வாடகைக்கு குத்தகையில் கொடுக்கப்படும். அடைவு கடை, சில்லறைக் கடை ஆகியவற்றுக்கு முன்னுரிமை தரப்படும். அடைவு கடையில் பங்கு வியாபாரத்திற்கும் தேவை ஏற்படின் தரலாம். விபரம் நேரில். 9522

## தவறிவிட்டது

21-10-83 மணிக்கூட்டு வீதிக்கும் கன்னாதிட்டி வீதிக்கும் இடையில் எனது அடையாள அட்டை (550542706 V) மணிபர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து தகவல் தரவும். கோ.மோகனதாஸ், 3.அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம். 9550

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

## வெற்றுச் சாக்கு விற்பனை

### உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 2000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம்மூலம் விற்பனைக்கு உண்டு. 2-11-83 திகதிக்கு முன்னர் ரூ 100/- கட்டி மேற்படி சங்கத்தில் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்

கேள்விப்பத்திரங்கள் யாவும் 5-11-83 திகதி பகல் 1 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்
9574

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### கந்தசாமி வேதநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியரும், சோதிடரும்)

மலர்வு: 06-04-1919
உதிர்வு: 01-10-1983

எமது குடும்பத் தலைவரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டுபலவகைகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

31-10-1983 (திங்கட்கிழமை) அன்று ஊறணியில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அனைவரையும்அன்புடன்அழைக்கின்றோம்.

எமது குல விளக்கின் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காங்கேசன்துறை வீதி,
வல்வெட்டித்துறை
9565

## 90வது நாள் நினைவஞ்சலி

### சி. இராஜன் கதிரவேல்



மலர்வு:
26-01-1963

உதிர்வு:
29-07-1983

ஆன்மா சாந்தியுறப் பிரார்த்திக்கும்
பெற்றோர், சகோதரர், நண்பர்.

நெல்லியடி
கரவெட்டி,
9579

## 100-வது நாள் நினைவஞ்சலி

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உயிர் நீத்த

### நவரத்தினராசா சிவபாதம்

(சிவபாதம் மாஸ்ரர்) அவர்கள்



படைப்பு: 30-7-1953

அழிப்பு: 24-7-1983

இறப்பு இயல்புதான்
ஆனாலும்
வெலிக்கடை
விலங்குகளின் அநீதியில்
உன் சாவு
சரித்திரமாக்கப்பட்டிருக்கிறது.
நமது அழுகை ஒரு
அடையாளம் தான்
வேதனையை விடு:
தலையை நிமிர்த்து:
உறுதி பெறு; ஓம்
நாளை நமக்காகட்டும்.

என்றும் உன் நினைவாக பெற்றோரும் சகோதரரும்.

அந்தியேட்டி கிரியை: 30-10-83

(9566)


## உண்மை

உண்மைதான் நிலைத்து நிற்கும்
மற்றெல்லாம் காலவெள்ளத்தில்
அழிந்துவிடும் — மகாத்மாகாந்தி




உங்கள் கடமை எது? உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு கொடுப்பது.
வாங்கிப் பாவியுங்கள் சுப்பமில்க்வைற் சோப்.
சகல விதமான ஆடைகளையும் மின் வேகத்தில் சலவை செய்து பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது.
சிக்கனத்தின் சின்னம். வெண்மையின் சிகரம்.

### சுப்பமில்க்வைற் சோப்

ரூபா 6/-

10 மேலுறைகளுக்கு ஒரு உலகப்படமும் இலங்கைப்படமும் இனாம்.

பொதுமக்களுக்கும்,
வர்த்தகப் பெருமக்களுக்கும்
பயன்தரக்கூடிய நல்ல பல சேவைகளை
நாணயத்துடன் அளித்துவரும்

# மல்ரி சேவிசஸ்

தாபனத்தார்,

மாணவ மாணவியர்களும்,
அலுவலகங்களில் பணி புரிபவர்களும்,
அயல்நாடு செல்லவிருப்பவர்களும்,
அறிவை விருத்தி செய்ய ஆசைப்படுபவர்களும்,
பிரயாணச் செலவையும்,
போக்குவரத்து நெரிசலையும்,
போதிய நேரமின்மையையும்,
தவிர்த்து —
வீட்டில் இருந்தபடியே,
வேண்டிய நேரத்தில்,
மிக இலகுவான முறையில்,
குறுகிய காலத்திற்குள்,
ஆங்கிலம் படித்துப் பயனடையக்கூடிய வகையில்,
விரைவில் ஆரம்பிக்கவிருக்கும்
மற்றுமோர் சேவைதான் —

### அஞ்சல்வழி ஆங்கிலம்.

விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவத்திற்கும், எழுதவேண்டிய முகவரி:-

# மல்ரி சேவிசஸ்

37 (351) மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(9561)

★ கிரனடா படையெடுப்பு:

# அமெரிக்க, பிரிட்டன் உறவில் கசப்புநிலை!

## பொதுநலவாய படைகளை அனுப்ப பிரதமர் தட்சர் ஆலோசனை!

சென்ஜோர்ஜ், அக். 28

**கிரனடாவில் இடம்பெற்ற திடீர் அமெரிக்க முற்றுகையையடுத்து பிரிட்டிஷ், அமெரிக்க உறவுகளில் கசப்புணர்வு ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரெட் தட்சர், அமெரிக்காவின் கிரனடா படையெடுப்பைக் கண்டித்திருப்பதுடன், இங்கிருந்தும் அமெரிக்கா விரைவில் வெளியேறிவிட வேண்டுமெனக்கோரியுள்ளார்.**

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி. தட்சர் பொதுநலவாய அமைப்பு நாடுகள் சார்பிலேயே பிரிட்டனின் கண்டனத்தை வெளியிட்டார். கிரனடா பிரிட்டனிடமிருந்து விடுதலைபெற்ற ஒரு முன்னைய காலனித்துவ நாடு என்பது குறிப்பிடத் தக்கது.

பொதுநலவாய அமைப்புத் தலைவர் திரு. ரம்பாலும் கிரனடாவில் அமெரிக்கப் படையெடுப்பைக் கண்டித்துள்ளார்.

திருமதி. தட்சர் கிரனடாவில் நிலைமையைச் சமாளிக்க பொதுநலவாய அமைப்பு நாடுகளைச் சேர்ந்த சமாதானப் படைகளை அனுப்பவும் யோசித்துவருகிறார்.

இதேவேளை அமெரிக்காவில் கிரனடா ஆக்கிரமிப்பை எதிர்

(8ம் பக்கம் பார்க்க)

## "கிரனடாவைக் கைப்பற்ற கியூபா திட்டமிட்டது!"

### றீகன் குற்றச் சாட்டு

வாஷிங்டன், அக், 28

'கிரனடாவைக் கைப்பற்ற கியூபா படைகள் திட்டமிட்டிருந்தன. சோவியத் யூனியனும்இதற்குஆதரவளித்தது.'' என்று அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் நேற்று வெள்ளை மாளிகைக் கூட்டமொன்றில் அறிவித்தார்.

திரு. றீகன் மேலும் கூறியதாவது: ''கிரனடாவில் அதன் தலைநகரான சென். ஜோர்ஜ்க்கு வடகிழக்கே பிரரெட்றிக போர்ட் என்ற இடத்தில் உள்ள கிரனடாவின் பெரும் இராணுவப் பாசறையை அமெரிக்க, கரீபிய படைகள் கைப்பற்றியுள்ளன. இதனையடுத்தே கியூபாவின் கிரனடா

(8-ம் பக்கம் பார்க்க)


## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை தபாற்கந்தோருக்கும்
யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் அருகாமையிலுள்ள
அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கத்திற்குச்
சொந்தமான காணி 1 பரப்பும்
அதனுள் அடங்கிய மேல்மாடி கட்டக்கூடிய
வசதியுள்ள கட்டிடமும் விற்பனைக்குள்ளது.
இதற்குரிய கேள்விகள் முத்திரையிடப்பட்டு
(SEALED TENDERS)
கௌரவ காரியதரிசிக்கு 11-11-83க்கு முன்
சேரக்கூடியதாக பதிவுத்தபால் மூலம்
அனுப்பப்படவேண்டும்.
ரூபா 250,000/-க்கு மேற்பட்ட கேள்விகளே
பரிசீலனை செய்யப்படும்.
மேலதிக விபரங்கட்கு:
மேற்படி கட்டிடத்திலுள்ள சங்கக் காரியாலயத்துடன்
தொடர்பு கொள்ளவும்.
(9576)

## HOTEL GNANAMS

யாழ். நகரில் . . . . .

- நவீன வசதிகள்
- குளிரூட்டிய, குளிர்சாதனம் அற்ற அறைகள்
- மேல்நாட்டு உள்நாட்டு உணவுக்ள்
- விசாலமான மண்டப வசதிக்ள்
(திருமணவைபவம், விருந்துபசாரம், கலந்துரையாடல்)
- WEEK DAY :-
Executive Lunch Rs. 20/-
Take Away Packets Rs. 20/-
WEEK END :-
Buffet Lunch or Dinner Rs. 30/-
- அமைதியான சூழ்நிலை

இவையனைத்தையும் வழங்குவது

ஹோட்டல் ஞானம்ஸ்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22082


# ஐ. நா.வில் தி மு. க. சமர்ப்பித்த மனு!

(நியுயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையில் திராவிட முன்னேற்றக் கழகம், இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக சமர்ப்பித்த மனுவில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

(நேற்றையத் தொடர்ச்சி)

''திருகோணமலையில் கடற்படையினர் திட்டமிட்ட முறையில் பாய்ந்தனர். தாக்கினர். இரவு 9-30 மணியிலிருந்து அதிகாலை 3-30 வரையான ஆறுமணி நேரத்திற்குள் அந்தக் கடற்படையினர் நூற்று ஐம்பது பேரும் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் அனைத்தையும் நாசப் படுத்திவிட்டனர்.

## திருமலையில் நடந்தது

''திருகோணமலையில் தமிழர்கள் மீண்டும் வாழ முடியாதபடி செய்யவேண்டும் என்று கடுமையாகத் திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தமிழர்களை அச்சுறுத்தவேண்டும். ஓட ஓட விரட்டவேண்டும். அதன் மூலம் இந்த நகரத்தை சிங்கள நகரமாக்கவேண்டும் என்பதே கடற்படையினர் நடத்திய தாக்குதலின் நோக்கம். இது மனித உரிமைப் பிரகடனத்தின் 2 (3)ம் பிரிவின் கீழ் திட்டவட்டமான இனப் படுகொலைக்குற்றமாகும்!

''கடற்படையினர் ஆயுதப் படையினர் மற்றும் காவல் துறையினர் ஒத்துழைப்போடு- நூற்றுக்காணக்கான தமிழர்களின் வணிக நிறுவனங்களையும் வீடுகளையும் தாக்கினர். அதன்மூலம் ஆயிரணக்கான தமிழர்களை வீடுவாசல் அற்றோர் ஆக்கினர் என்பது மட்டுமில்லை. 1981ம் ஆண்டைய படுகொலைக்கு பின்மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து திருகோணமலையில் வாழ்ந்த தமிழ் அகதிகள் சுமார் 600 பேரை அச்றுசுத்தி வாகனங்களிலேற்றி மீண்டும் மலைத் தோட்டங்களிலேயே கொண்டு போய் விடவும்செய்தனர். இந்த நடவடிக்கையின்போது குடும்பங்கள் பல பிரிக்கப்பட்டன. மலைத்தோட்டங்களில் அநாதைகளாக விடப்பட்ட அவர்கள் பெரும் பெரும் துன்பங்களை அடைந்தனர். அவர்களை மீண்டும் மலைத்தோட்டங்களில் கொண்டுவிட்டது ஏன்? மலைத்தோட்டங்களில் அவர்கள் மீண்டும் அடிமைகளாக வாழவேண்டுமென்பதற்காகவா? அல்லது மீண்டும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படவா? அது தெரியவில்லை.

## சிவசிதம்பரம் இல்லம்

''இந்தச்செயல் கலவரத்தின் உச்சியில் நடந்த ஒருதாக்குதல் இல்லை. தமிழர்களைத் திருகோணமலை மாவட்டத்திலிருந்து முற்றாக விரட்ட வேண்டும் என்ற ஒரு திட்டமிட்ட சதியின் அங்கமே [கடற்படையினர் தாக்குதல்) என்பதை காட்டுகிறது!

''சிங்கள வன்முறைக்கு ஆரம்பத்திலேயே ஆளானவர்களுள் ஒருவர் சிவசிதம்பரம் அவர்களாவார்கள். இவர் நல்லூர்த்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராவார். தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணியின் தலைவருமாவார்! கொழும்பு நகரில் இவரது வீடும் உடைமைகளும் அவரது வாகனம் உட்பட அனைத்தும் எரித்துச்சாம்பலாக்கப்பட்டன

''1983 ஜூன், ஜூலையில் தமிழர்களுக்கு எதிராகநேர்ந்த நாசம் மிகப்பிரமாண்டமானவை. கொழும்பு நகரிலும் அதைச்சுற்றியுமிருந்த தமிழர்கள் மற்றும் இந்தியத்தொழிலதிபர்களுக்குரிய தொழிற்சாலைகள் அனைத்தும் அநேகமாக) முற்றாக நாசப்படுத்தப்பட்டன. கொழும்பு நகரில் தமிழர்கள் வணிக நிறுவனங்கள் பெரும்பாலனவையும் நாசப்படுத்தப்பட்டன. மனித உயிரிழப்போ பல ஆயிரங்களாக மதிப்பிடப்பட்டுள்ளன.

## வெலிக்கடை சம்பவம்

அரசாங்கமோ ஏறத்தாழ நானுபேர்தான் செத்தனர் என்கிறது. இதுமெத்தவும் குறைவானது. முதலில் காணாமற்போய்விட்டனர். என்று சொல்லப்பட்ட நூற்றுக்கணக்கானோர் - இறந்துபோய்விட்டனர். என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் படுகொலைகளுள் மெத்தவும் அருவருப்பானவை மெத்தவும் பெரும் வெறுப்பிற்குரிய படுகொலைகள் 1983 ஜூலை 25அன்றும், மீண்டும் ஜூலை 27அன்றும் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டதாகும்,

''இதுகுறிப்பாக முதல்படுகொலைகள் நடந்து இரண்டு நாள்கழித்து மீண்டும் இரண்டாம் முறையாக நடந்தன என்பது இந்தப் படுகொலைகளுக்கு உடந்தையாக இருந்தது என்பதைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றது. கொல்லப்பட்ட கைதிகளுள் ஒருவர் திரு. குட்டிமணிசிங்களக்கைதிகளால் அவரது விழிகள் தோண்டி எடுக்கப்பட்டன. அவர்கள் அவரது...... பெரும் கொடுமை இது.

அந்தத் தமிழ்க்கைதிகளெல்லாம் உதவியோடும் ஒப்புதலோடும் சித்திரவதை செய்யப்பட்டு கொன்றுதீர்க்கப்பட்டனர். இது ஆட்கொலைக்குற்றமாகும்! இந்தத்தாக்குதலுக்கு உயிர்தப்பியோர்சான்றுகூற ஆயத்தமாயுள்ளனர்.

''சிங்களக்கைதிகள் தாமாகவே சிறைக்கொட்டடிகளைத் திறந்துகொண்டு வந்து தமிழ்க்கைதிகளை கொன்றனர் என்று அரசாங்கம் சொல்லும் கதை ஆதாரமற்றது. கொலைகாரர்களை அடக்க சிறை அதிகாரிகள் ஏதும் செய்யவில்லை என்பதும் விநோதமான ஒன்று.

யாழ்ப்பாணம் சிறைச்சம்பவம் அரசின் மனப்போக்கை காட்டுகிறது. வெலிக்கடை சிறைகொடுமைகளுக்கு பிறகு யாழ்ப்பாணம் சிறையில் தமிழ் கைதிகள் தப்பமுனைந்தபோது அவர்களில் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பதே யாழ். சிறைச் சம்பவம்.

வெலிக்கடைச் சிறையில் தமிழ்க்கைதிகள் கொல்லப்

(8ம் பக்கம் பார்க்க)

## பதில்பிரதம நீதியரசர் சர்வானந்தா

[கொழும்பு]

இலங்கை உயர் நீதிமன்றின் பதில் பிரதம நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா ஜனதிபதி ஜயவர்த்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் தமது பாரியார் சகிதம் ஆஸ்திரேலியாவுக்கு இருமாத விடுமுறையில் சென்றுள்ளார். இதனையடுத்து அதிசிரேஷ்ட நீதியரசர் திரு. சர்வானந்தா பதில் பிரதம நீதியாசராகச் சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டார். (ஓ)


★ ட்ரான்ஸ் வேர்ல்ட் ஏயர் லைன்ஸ்
★ சவூதி அரேபியன் ஏயர் லைன்ஸ்
★ எத்தியோப்பியன் ஏயர் லைன்ஸ்
★ மலேசியன் ஏயர் லைன்ஸ்
ஒழுங்குகள்

உங்கள் சகல விமானப் பயண
தேவைகளுக்கும்
இப்பொழுது
யாழ்ப்பாணத்திலேயே
தொடர்பு கொள்ள முடியும்
மெர்க்கன்டைல் ட்ரூவர்ஸ்
(சிலோன்) லிமிட்.,
11/8, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22321 9430

## மணிவாக்கு

துன்பப்படாமல் பண்பாடடைய முடியாது.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## நம்முயிர் நாட்டுயிரே

இன்று எதுவித விளக்கமுமின்றி இந்தியாவைப் பொதுவாகவும், தமிழ்நாட்டைக்குறிப்பாகவும் கண்டித்துவரும் கொழும்புத் தினசரிகளும் அவற்றை ரசிக்கும் மனிதபேதைகளும் உணரவேண்டிய உண்மை என்னவென்றால்: இங்கு வாழும் தமிழ்மக்கள் இந்த நாட்டையே தமது நாடு என்று நம்பி வாழ்கின்றனர். இந்த நாடுவாழ எத்தனை தமிழர் தம்முயிர் ஈந்திருக்கின்றனர்.

ஏறக்குறைய 2500 ஆண்டுகளாக இந்நாட்டில்வாழ்ந்த மக்களைப்பற்றிய வரலாறு நன்கு அறியக்கூடியவாறு அமைந்திருக்கிறது.

தமிழ்மக்கள் இந்நாட்டு மக்கள்; ஒரு சிறுபான்மைச் சமூகமல்ல வென்பது தெளிவாகின்றது.

கடைச்சங்கம் மதுரையிலிருந்து தமிழ் வளர்த்த காலத்தில், ஈழநாடாகிய இலங்கையில் வாழ்ந்தபூதந் தேவனர் என்ற பெரும் புலவர் அம்மதுரைத்தமிழ்ச் சங்கத்திலே உறுப்பினராக விளங்கினர். அவருடைய பெருமையை எடுத்துக் காட்ட அவர் ஈழத்துப்பூதந் தேவனர் என்னும் பெயரினலேயே அக்காலந்தொட்டு அழைக்கப்பட்டுள்ளார்.

இன்று வரைக்கும் இத்தகைய ஈழத்துப் பெரியோர் பலர் தமிழர்களாகவே இருந்து வருகின்றனர். தமிழ்மக்களில் பெரும்பான்மையோர் கடைப்பிடிக்கும் இந்து சமயமும்இந்துநெறியிற் சீர்திருத்தஞ் செய்ய எழுந்த புத்தபிரானின் போதனையை தம்மதமாகக் கொண்ட பௌத்தர்களும் இங்கு மத ரீதியில் ஒன்றுபட்ட வணங்கிவரும் தலங்கள் வடக்கிலும் தெற்கிலும் என்றும் ஞானஒளி பரப்பிவந்தன. இன்று அந்த ஒளி மங்குவதை யார் விரும்புவார்?

கதிர்காமம், நாகதீபம், முனீஸ்வரம், கோணேஸ்வரம், பொலநறுவை போன்ற பொது புனித தலங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

சுதந்திர இலங்கையில் இன்று வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பும், உரிமைகளும் கட்டுப்படுத்தப்படவேண்டுமென்ற கிளர்ச்சி எவ்வாறு எழுந்தது? சடுதியாகவல்ல.

அடிமை ஆட்சியில், குறிப்பாக ஆங்கில ஆட்சியில், தமிழ் மக்கள் தங்களுக் குரித்தான பங்குக்கு மிக அதிகமான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று வாழ்ந்தனர் என்ற 'வயிற்றெரிச்சல்' பௌத்தமத சமுதாயத்தில் மிக வேகமாகவும் வன்மையாகவும் எழுந்தது. தமிழ் மக்களின் இயற்கையான திறமை ஊக்கம், உழைப்பு, இந்த ஆராய்ச்சியில் இடம்பெறவில்லை.

'இது எங்கள் நாடு; தமிழர்கள் வந்தேறு குடிகள்' என்ற கோஷமும் படிப்படியாக வலுவடைந்தது; கோஷம் பெரும்பான்மை சமூகமான பௌத்த சிங்கள மக்களைச் கிளர்ச்சி செய்ய உதவியது. அகில இலங்கைக்கட்சிகள் என்று வேடம் போட்ட ஐ. தே. கட்சி, 'சிறிலங்கா' இந்தக் கிளர்ச்சியைத் தக்கவாறு பயன்படுத்தி ஆட்சிக்கு மாறி மாறி வந்ததால், நாடு இன்று இந் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

இன்றைய நிலை என்ன? பலதடவைகள் நடைபெற்ற இனக்கலவரத்தால், உயிர் உடைமை தொழில் இழந்த தமிழ்மக்கள் எங்களுக்கென்ன கதி, எங்களை யார் காப்பாற்றுவார் என்று ஏங்கிநிற்கும் நிலை ஒருபுறம்.

தனிநாடு என்ற கோரிக்கையை கலகத்துக்கு காரணமாகக்காட்டி ஒற்றை ஆட்சியின் கீழ் இயங்கும் நாட்டில் அதன் அதிகாரத்தை மீறி (அதிகாரம் ஆதரவென்றும் கருதப்படுகிறது) அப்பாவி தமிழ் மக்கள் ஈன இரக்கமின்றி கொலை செய்யப்பட்டதால் ஏனையோர் பாதுகாப்புக்கு யாழ்ப்பாணம் ஓடித்தப்பினர். இன்று இந்த நாட்டைத் தம்தாயாகக்கொண்ட தமிழரை என் செய்யலாமென்ற பிரச்னைஅரசையே பாதித்திருக்கிறது. தன் அப்பம் தன்னைச்சுடும்.

வேற்று நாடுகளில் இடம் பெறும் சதிகாரணமாக சடுதி ஆட்சிமாற்றம், ராணுவப்புரட்சி, வெளிநாட்டுத் தலையீடு - இவையெல்லாம் இங்கு இன்று காணப்படும் பிரிவினை மனப்பான்மைக்கு ஒருநல்ல சந்தர்ப்பம் போல் தெரிகிறது.

வெறியாட்டம் அமர்ந்திருக்கும் இவ்வேளையில் பத்திரிகைகளும் அரசியல் தலைவர்களும் மக்கள் பட்டிருக்கும்புண்ணில் ''புளி'' வார்க்காது அச்சத்தில் அகதிகளானவர்களை தத்தம் தொழிலுக்கும், கல்விக்கும் உறைவிடத்துக்கும் திரும்பும் வகையில் தாம் செய்த தீங்குகளுக்கு தாமே பரிகாரம் தேடவேண்டும். வேறெந்த வழிக்கும் இடமளித்தல் நாடனைத்துக்கும் அபாயம்.

சிங்களச்சமுதாயம் பண்டைக்காலத்தில் பல பெருமைகளுக்கு உரித்தானது. அவற்றையெல்லாம் அழித்து ஒழித்து உலகில் அவமதிப்பு ஏற்படுத்துவதே இன்று நிகழ்ந்த இனக்கொடுமைகள்! இதனை உணரத்தவறினல் நிலைமை மேலும் மோசமாகும்.

ஆட்சியின் தலைமைக்கு போராடும் அதிகாரவெறியடங்காத தலைவர்களை விட்டு சமூகத்தின் சான்றோர்கள் குறிப்பாக பௌத்தமதத் தலைவர்கள் கண்திறந்து நிலைமை வழமைக்குத் திரும்ப உடனடியாக உதவவேண்டும்.

## சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின், ஆய்வரங்கு நாளை மாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய ஆய்வரங்கில் ''கால விதானம்'' பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(க)

# வடமுனை

வடமுனைப் பிரதேசத்தை அடைந்தபோது மாலை 4 மணி மப்பும் மந்தாரமுமான காலநிலை, மழையும் சிறிது தூறியது.


எமது ஜீப்வண்டி சுமார் அரைமைல் தூரத்தைக் கடந்து சென்றதும், அத்துமீறியவர்களின் நடமாட்டம் சிறிது சிறிதாகத் தென்பட ஆரம்பித்தது. ஆங்காங்கே புதிதாக அமைக்கப்பட்டிருந்த குடிசைகள் மழைக்கு முளைத்த

[3]

காளான்கள் போல் காணப்பட்டன.

### வெளிநாட்டுக் கூடாரமில்லை

வடமுனை விவகாரம் பற்றிப் பேசுபவர்கள் வெளிநாடுகளிலிருந்து இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைத்தகூடாரங்களையே அத்துமீறிக் குடியேறியவர்கள்தாம் குடியிருக்க உபயோகிப்பதாகச் சொல்லக்கேட்டிருந்தேன்.




● வரைபடத்தில் காணப்படும் ஆருவது இலக்கம் கொண்ட பகுதியே வடமுனையாகும்.

## ★ மலேரியா, வயிற்றோட்ட நோய்!
## ★ சுத்தமான நீர் இல்லை!!

ஆனல் எனது கண்ணுக்கெட்டியதூரம்வரை அப்படி வெளிநாட்டுக் கூடாரங்கள் போடப்பட்டதை நான் காணவில்லை. மாறாகத் தென்னோலைக்கிடுகுகளினலான கொட்டில்கள் இருப்பதையும், அமைக்கப்படுவதையும் அவதானித்தேன். சில தனியார் லொறிவண்டிகள் கிடுகுகளைவிநியோகிப்பதில் ஈடுபட்டிருந்தன.

எமது ஜீப்வண்டி ஊர்ந்து கொண்டிருந்தது. மழைத்தூறலும் தொடர்ந்துகொண்டேயிருந்தது. ஜீப்பிலிருந்தும் இறங்கிக் கால்நடையாகச் சென்று நிலைமையை அவதானிக்கலாம் எனத் தோன்றியது. இளைஞர் 'ஆரிய' விடம் என்விருப்பத்தைக் கூறினேன்.

''கட்டாயம் இறங்கிச் சென்று பார்க்கவேண்டுமென்றுதான் விரும்புகிறீர்களா? என்ருர் அவர் ''அப்படிச் செய்வதில் எதுவுமில்லையே'' என்றேன்.''

''சகோதரரே உமது விருப்பத்தைக் கைவிடும். வேண்டுமானல் நான் உம்மைச்சிறிது தூரம் கூட்டிச்செல்கிறேன். ஆனல் அதோ தெரியும் கொட்டில்களுக்கு நடுவே செல்வது, அங்குள்ளவர்களுடன் பேசுவது என்பதைத் தவிர்ப்பதே நல்லது'' என்ருர்.

### 'எனக்குப் புரிகிறது' அவர்களுக்கு?

எதற்காக இப்படிக் கூறுகிறீர்கள்?'' என்றேன்.

''எனக்கு உங்களைப் புரிகிறது. ஆனல் அங்குள்ளவர்கள் நிலைமை வேறு. எந்நேரத்திலும் தமக்குப் பயமுறுத்தல்கள் வரலாம். புதியவர்கள் யாராவது வந்து தம்மை அச்சுறுத்தலாம் என்ற பீதியுடனேயே அவர்கள் இருக்கிருர்கள் இதனல் அவர்கள் எம்மைக் கண்டதும் கலவரமடையவும் கூடும்'' எனருர்.

ஆரிய கூறியதில் நியாயமிருப்பதைப் புரிந்துகொண்டேன். வடமுனைக் காட்டினுள் வெளித்தொடர்புகள் எதுவுமின்றி இருப்பவர்களுக்கு புதியவர்கள் வருகை சங்கடமாகவே இருக்கும். ஆரியாவும் அவர்களுக்கு ஓரளவே பழக்கப்பட்டவர். ஏனெனில் அவர்களில் பலர் பல்வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள்.

### பல பகுதிகளையும் சேர்ந்தவர்கள்

இங்கு வருமுன் அறிக்கையொன்றில் கொத்மலை, தெல்தெனிய, மாத்தளை, பொலன்

(7ம் பக்கம் பார்க்க)

பா. அனந்தகிருஷ்ணன்

## சங்குப்பிட்டிப் படகுப் பிரயாணம்

யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு வழியாக, பூநகரி, துணுக்காய் அதற்கப்பால் மன்னர் பிரதேசம் பயணம் செய்பவர்கள் சங்குப்பிட்டியில் படகேறவேண்டிய அவசியமுடையவர்கள்அக்கரையிலிருந்து யாழ்ப்பாணம் வருபவர்களும் இப்படகை நம்பியே இருக்கின்றனர்.

தரைவழியாக பஸ்ஸில் பல மைல்கள் சுற்றும் நேரத்தையும் பொருளையும் விரயமாக்காது படகு சேவையில் குறுக்கு வழியை நாடுவது உயிருக்கு

# மக்கள் கருத்து

அபாயமென்பதை நாமும், இன்னும் பலரும் நேரடியாகக் கண்டிருக்கிறோம்.

படகில் காலெடுத்து வைத்தால் கடலில் தடக்கிவீழ்வது சாதாரண அனுபவம் போலிருக்கிறது; எவ்வித ஆயத்த அறிவித்தலின்றி கடைசி நேரத்தில் படகில் ஏறுபவர்கள் சாரதியின் பாதுகாப்பை எதிர்பார்க்கமுடியாது.

படகிலும், கரையிலுமில்லாத திரிசங்க சுவர்க்கமே பல பிரயாணிகளின் துன்ப அனுபவம்.

ஆபத்துக்குள்ளாகி, வெற்றிகரமாக அக்கரை கண்டோர் பலர் தாங்கள்கொண்டுபோகும் பொருள்கள் சிலவற்றை இழக்கவும் கூடும். கடலிலல்ல; படகு ஊழியர்களிடம்; விசாரணைக் கோரிக்கை அவர்களின் நெற்றிக்கண்ணில் எழும் கோபாக்கினிக்கு ஆளாக நேரிடும். இந்த நிலைமைக்கு நிவாரணம் கிடைக்குமா?

அ. இ. செல்வநாயகம்,
கொக்குவில்.

# இலங்கைத் தமிழருக்கு பாதுகாப்பு வேண்டும்

(இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஸ்ரீ குமரகுருபரர்' என்ற சமய சஞ்சிகையில் இலங்கை நிலைமை குறித்து 'தமிழ் ஈழம்' என்ற தலைப்பில் வெளியான தலையங்கம்.)

தமிழர்களே ஆண்ட தமிழ் நிலப் பகுதியில் இன்று தமிழர்களின் ரத்தம் ஆருக ஓடுகிறது! பிணமலைகள் குவிந்துள்ளன. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதும், பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் ஜீவ மரணப் போராட்டத்தில் விழி இழந்தும், கையிழந்தும், காலிழந்தும், அடிபட்டும், நசுங்கியும், நெரிபட்டும் அல்லற்படுவதை நினைத்தாலே நெஞ்சு வெடிக்கிறது.

இத்தனையையும் திருவிழாப் போலக் கருதி நடத்திக் கொண்டிருப்பவர்கள் சிங்களவர்கள், ராணுவம், பொலிஸ் ஏன் அதிபரின் 'பக்கபலமும் கூட;

மகாவம்சமே! நீமுன்பும் பலமுறை சேற்றைப் பூசிக் கொண்டு சந்தோஷப் பட்டதுண்டு! இப்பொழுது ரத்தத்தைப் பூசிக்கொள்கிருய்!

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் ஆட்சிமொழியென்ற போதுதோட்டத்தொழிலாளர்களாகிய பல்லாயிரம் தமிழர்களுக்குக் குடியுரிமை கிடையாது என்று சட்டம்செய்த போது-

1958இல் இனக்கலவரம் செய்த நூற்றுக்கணக்கான தமிழர்களை சிங்களக் குண்டர்கள் கொன்று குவித்தபோது-

1972ஆம் ஆண்டு தமிழர்களின் உரிமைப் பாதுகாப்புப் பற்றிய அரசியல் சாசனம்29ம் சரத்தை ரத்துச்செய்தது.

10-1-74 அன்று யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சியில் உலகெங்கிலுமிருந்து வந்த தமிழ் அறிஞர்கள் உட்பட 50,000 தமிழர்கள்மீது போலிசும், இராணுவமும் புகைகுண்டு களை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் கலவரமாக்கியபோது-

1981ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்திலிருந்த உலகப் புகழ்பெற்ற தமிழ் நூல் நிலையத்தைச் சாம்பலாக்கிக் கோர நர்த்தனமாடிய பொழுது—

தமிழகம்-இந்தியா - உலகம் அவதானிக்கவில்லை என்று சிங்களவர்கள் கருதினல் அவர்கள் தம் மடமையை மேலும் உறுதி செய்து கொள்கிருர்கள் என்றுதான் அர்த்தம்!

இலங்கையின் தமிழ்ச் சமுதாயத்தை 30 சதவிகிதமாகக் குறைக்கவே நாடாளுமன்றமும் ஆட்சியும் என அமைந்த அவலட்சணங்களைச் சிங்களவர்கள் கண்ணை மூடிக் கொண்டு செய்திருக்கலாம். அது உலகத்திற்குத் தெரியாமற் போகவில்லை.

அப்பொழுதெல்லாம் ''அது இலங்கையின் பிரச்னை; உள்நாட்டு விவகாரம்'' என்று இந்திய அரசு இருந்ததும், தமிழக

(7ம் பக்கம் பார்க்க)

# "பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு தங்கியிருக்கும் மாவட்டதில் அக். சம்பளம் வழங்கவும்"

## ஜனதிபதிக்கு அவசர தந்தி

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துவந்த ஆசிரியர்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் மாவட்டத்திலேயே அக்டோபர் மாதச் சம்பளத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளரைப் பணிக்கும்படி தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனதிபதியிடம் கோரியுள்ளது

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் நேற்றுமுன்திமைம் அனுப்பிய 300 சொற்களைக் கொண்ட அவசரத் தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக இடம்பெயர்ந்துவந்த ஆசிரியர்கள் அக்டோபர் 12-ம் திகதி வரை இடம்பெயர்ந்த மாவட்டங்களில் வேலைசெய்ய அனுமதிக்கப்பட்டார்கள்.

ஓர் ஆசிரியர் வழக்கமான சட்டதிட்டத்திற்கு அமைவாக மாதத்தில் முதல் திகதி எந்தப் பாடசாலையில் கடமையாற்றிஞரோ அந்தப் பாடசாலையில் சம்பளம் பெற உரிமையுடையவர். எனவே இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அனைவரும் அக்டோபர் மாதச் சம்பளத்தை இடம்பெயர்ந்துவந்த மாவட்டத்தில் பெற்றுக்கொள்ள உரிமையுடையவர்கள்.

நவம்பர் மாதம் 4-ம் திகதி தீபாவளிப்பண்டிகை வருகிற காரணத்தால் அக்டோபர் மாதச் சம்பளம் கிடையாவிட்டால், ஆசிரியர்கள் தமது சமயப் பிரார்த்தனையையும், கைவிடும் சூழ்நிலை ஏற்படுகின்றது. இவர்களுக்கு இடம்பெயர்ந்துவந்த மாவட்டத்தில் தமது சம்பளத்தை கொடுப்பதற்கு அரசுக்கு மேலதிக செலவு எதுவும் ஏற்படப் போவதில்லை.

ஆகவே, தாங்கள் இவ்விவகாரத்தில் தலையிட்டு, இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு, இடம்பெயர்ந்துவந்த மாவட்டத்திலேயே அக்டோபர் மாதச் சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி கல்வி அமைச்சின் செயலாளரை பணிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாசிரியர்கள் தமது இழப்புகளுக்கு, நிரந்தர இடமாற்றம், ஒய்வுபெற அனுமதிப்பதோடு நிவாரணம் வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்துள்ளனர். ஆனல் இந்த மேன்முறையீடு தொடர்பாக கல்வி அமைச்சில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இவர்களின் இவ்விவகாரத்தில் தலையிட்டு மேன்முறையீட்டைப் பரிசீலனை செய்து நீதி வழங்குப்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

நீதி வழங்கப்படும்வரை தொடர்ந்தும், தற்காலிக இடமாற்றம் பெற்ற பாடசாலைகளில் சேவை செய்ய இவர்களை அனுமதிக்கும்படி கல்வி அமைச்சின் செயலாளரை பணிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இத்தந்தியின்பிரதிகள் கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்கா, அமைச்சர் எஸ். தொண்டமான், அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் ஆகியோர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ச)

## சாரணர் வாரம்

(யாழ்ப்பாணம்)

நான்காவது யாழ்ப்பாணம் சாரணர் குழுவினர், தேசிய சாரணர் வாரத்தை கடந்த 26ம் திகதி முதல் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். ஆரம்பவைபவம் யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர் திரு ச. பொன்னம்பலத்தின் கொடியேற்று வைபவத்துடன்தொடங்கியது.

சாரணர்குழுத்தலைவர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா ஆரம்ப உரை நிகழ்த்திய போது; தேசியசாரணர்வாரத்தைஅக்டோபர்26ம் திகதி முதல் நவம்பர் 1ம் திகதி வரை அனுஷ்டிக்குமாறு தலைமைக்காரியாலயம் வேண்டியதற்கு அமைய தயாருக்கு உதவுதல், வளப்பாதுகாப்பு, நட்பு வளர்த்தல், அயலாருக்கு உதவுதல், சமய அனுஷ்டானம் ஆகியவற்றை பின்பற்றும் முறையில் இவ்வாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்குரிய ஒழுங்கினை செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## நூல் விமர்சனம்

நூல்: சுந்தரர்பிள்ளைத்தமிழ்

ஆசிரியர்: பண்டிதர் சோ. தியாகராஜ பிள்ளை

வெளியீடு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

விலை; ரூபா 6/-

கவிதைத் துறையிலே ஈழம் முன்னணியிலே நிற்கின்றது என ஒருசமயம் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வடிவத்திலும் பொருளமைதியிலும் ஈழத்துக் கவிதைகள் சிறந்து விளங்குகின்றன என்பது அவருடைய கருத்தாகும் கடந்த கிழமை வெளியிடப்பட்ட, பண்டிதர் சோ. தியாகராஜ பிள்ளை எழுதிய சுந்தரர் பிள்ளைத்தமிழ் இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

சிற்றிலக்கிய வகையிலே பிள்ளைத்தமிழ் பிரபந்தமும் ஒன்ருகும். இந்த வடிவம் பல்லவர் காலத்தில் வாழ்ந்த பெரியாழ்வாரால் அறிமுகஞ் செய்யப்பட்டதென்பதே பலரது கருத்தாகும். ஆனல் இவ்வடிவம் அதற்கு முன்னரே தோன்றிவிட்டதென்பாருமுளர்.

நம்முன்னேர்கள் இறைவனிடத்தில் அன்பைச் செலுத்தப் பல வழிகளைக்கையாண்டனர். அவற்றுள் ஒன்று இறைவனைக் குழந்தையாகப் பாவனைசெய்து வழி படுதலாகும். அந்த வழிபாட்டு நெறியில் நின்றும் முகிழ்த்ததே பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும்,

சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பத்துப் பருவங்களையும் இனிய எளிய சந்தப்பாக்களால் இந்நூலாசிரியர் பாடியுள்ளார். ஆசிரியருடைய தேவார திருவாசகங்களில் ஊறித்திளைத்த ஞானமும், நாயன்மார்களுடைய வரலாறுகளைக் கற்றுத் தேறிய உள்ளமும் திருப்பதிகள் தோறும் சென்று வணங்கிப்பெற்றஅனுபவமும் இந்நூல் முழுவதிலும் இழையேடியிருக்கக் காணலாம்.

ஆசிரியர் மிகவும் சிறந்த உவமைகளையும் உருவங்களையும் கையாள்வதில்வல்லவராகவும், கற்பனை நலனும் கவித்துவ வளமும் மிக்கவராகவும், சொற்பஞ்ச மில்லாதவராகவும் காணப்படுகிருர். எடுத்துக்

(9ம் பக்கம் பார்க்க)

0 0 0

நூல்; கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை தமிழ்மொழி புது மாதிரிகைப்பயிற்சி விஞத்தாள் - 5

ஆக்கம்: வித்துவான் க. சொக்கலிங்கம்

வெளியீடு: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்

விலை: ரூபா 6-90

1983ம் ஆண்டுக்குப்பின்னர் க, பொ. த. (சாதரண) பரீட்சைக்குத் தமிழ் கற்கும் மாணவர்களுக்குப் மிகப்பயன்தரத் தக்கமுறையில் இன்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களுக்குத் தேவையான "அ" பாடத்திட்டவிஞக்களும் முஸ்லிம் மாணவர்க்குத் தேவையான "ஆ" பாடத்திட்ட விஞக்களும் இதில் இடம் பெற்றுள்ளது.

இந்நூலிலுள்ள 5 விஞத்தாள்களிலும்இடம்பெற்றுள்ள முதல் நாற்பது கேள்விகளுக்குமான விடைகள் நூலிறுதயில் கொடுக்கப் பட்டுள்ளதுடன் நூலின் முன் அமைந்துள்ள 'கவனிக்க' என்ற பகுதியும் மாணவர்கள் விடையெழுதிப் பயிற்சி பெறுதற்கான குறிப்புக்களுடன் உள்ளது.

பரீட்சைக்குரிய பாடங்களை மட்டும் கற்றுவிட்டு பரீட்சை மண்டபத்தில் விஞத்தாளைப் பெற்று இடர்பட்டு மயங்காது தமிழ்மொழிப் பரீட்சையில் விசேட சித்திகளைச் சுலபமாகப் பெற இந்நூல் உதவுவது மட்டுமன்றி க. பொ. த, சாதாரண பரீட்சைக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

— சத்தியம்



# 'பிழைப்புக்காக இலங்கைசென்ற நாம் இந்தியா வரத் தடையா?'

## இ. தொ. கா. செல்லச்சாமி கேட்கிறார்

"புகுந்த வீட்டில் இன்னல்களையும், கொடுமைகளையும் தாங்காமல் பிறந்த வீட்டுக்கு ஓடிவரும் பெண்களைமட்டும் அங்கீகரிக்க சமூகத்தில் இடமுண்டு, ஆனால் இங்கே இருந்து பிழைப்புக்காக இலங்கைக்குக் குடிபோன நாங்கள் இந்தியா வருவதற்குத் தடையா?''

இப்படித் தமிழ்நாட்டில் கேட்டார், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், கொழும்பு மாவட்ட சபை அங்கத்தவருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி.

தமிழக முதல்வர் எம் ஜி. ஆரின் 'தாய்' வார இதழுக்குப் பேட்டி அளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவரது பேட்டி விபரம் வருமாறு:-

### தொல்லைகள் நமக்கு அதிகம்

கேள்வி: தங்கள் இந்தியப் பயணத்தின் நோக்கம் என்ன?

பதில்; இலங்கையில் உண்மையிலேயே என்ன நடக்கிறது என்றுஇங்கேஇருக்கிறதமிழகத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் சரிவரத்தெரியவில்லை, யாழ்ப்பாணத் தமிழர்களைவிட இந்தியாவிலிருந்து சென்று வாழும் தமிழர்கள்படும் தொல்லைகள்தான் அதிகம், யாழ்ப்பாணத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்கள வெறியர்களின் வெறியாட்டம் குறைவு. அண்மையில் நடந்த கலவரத்தால் உயிரிழந்த தமிழர்களில் 95 சதவீதமானோர் தேயிலைத்தோட்டங்களில்பணி புரியும் இந்தியவம்சாவளி தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கே: யாழ்ப்பாணத் தமிழர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்று ஏன் தமிழர்களைப் பிரித்துப் பேசுகிறீர்கள்? இது தமிழ் இனத்தைப் பிரிவினைப்படுத்துவது போலல்லவா இருக்கிறது? இது எதிரிகள் செய்யவேண்டிய காரியம் அல்லவா?

ப: இது பிரித்துப்பேசுவது அல்ல. இலங்கையில் வட பகுதியில் வாழும் அதுவும் தலைமன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் வாழும் தமிழர்களை யாழ்ப்பாணத் தமிழர்கள் என்று சொல்வார்கள் இவர்கள் இலங்கைக் குடியுரிமை பெற்றவர்கள். மற்றப் பகுதிகளில் ஆங்காங்கே தோட்டங்களில் பணிபுரிகிற தமிழர்கள் பெரும்பாலும் தமிழகத்திலிருந்து பிழைப்புக்காகச் சென்றவர்கள். இவர்களில் பெரும்பாலாருக்கு குடியுரிமை இல்லை. இந்த தோட்டத் தொழிலாளிகளுக்குகுடியுரிமை வழங்கிடவேண்டும் என்கிற கோரிக்கையை எங்களது அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்தி வந்தது. அதை செயல்படுத்துவதாக ஜெயவர்த்தன உறுதி தந்ததால்தான் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஜெயவர்த்தனவுக்கு ஆதரவுஅளித்து வந்தது. ஆனால் ஜெயவர்த்தனவின் அராஜக போக்கு எங்களுக்கு இருந்த நம்பிக்கையை அறவே போக்கிவிட்டது இப்போது தோட்டங்களில் வசிக்கிற தமிழர்கள் ஆதரவற்ற அனாதைகளாக இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவிற்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை இதனை இங்கே இருக்கிற தலைவர்களுக்கு எடுத்துச் சொல்லவே நான் இந்தியாவிற்கு வந்திருக்கிறேன்''

கே: இந்தியப் பொருளாதார நிலைமை உங்களுக்கு இடம் தருமா?

ப: ஒத்து வருகிறதோ இல்லையோ... எங்களைப் பொறுத்தவரை நாங்கள் எங்களைக் காப்பாற்றிக்கொள்ள இந்தியாவிற்குத்தான் வரமுடியும். எங்களுக்கு இங்கேஇருக்க இடம் தந்தால்கூடப் போதும்... அதனை நாங்கள் தொழில் வளப்படுத்திக் காண்பிக்கிறோம். பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் நல்ல உழைப்பாளிகள். அதுமட்டுமின்றி நாங்கள் வேறுஇடத்துக்கு இடம்பெயர்ந்தால் எங்கள் வாழ்வு உயர, தொழில் வளத்தை உண்டாக்க சர்வதேச தொழிற்சங்கங்களின் நிதிநிறுவனம் எங்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. இந்தநிலையிலும் இந்தியா எங்களைஏற்றுக்கொள்ளா விட்டாலும்...... நாங்கள் இங்கேதான் வருவோம்''

கே: நீங்கள் இந்தியாவிற்கு வருவதைவிட... இலங்கையிலேயே எல்லா தமிழர்களோடும் இணைந்து தமிழீழம் அடைகிற முயற்சியில் ஈடுபட்டால் என்ன?

### தமிழக சஞ்சிகைக்கு அளித்த பேட்டி

ப: ''நாங்கள் அப்படிப் போராட்டத்தில் ஈடுவது அவ்வளவு எளிதல்ல. இந்திய வம்சாவழித் தமிழர்கள் (தோட்டத் தொழிலாளிகள்) பெரும்பாலும் சிங்களவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியிலேதான் வசிக்கிறார்கள். 10 சிங்களவர்கள் இருக்கும் இடத்தில் ஒருவர் வசிக்கிறோம். ஆனால் யாழ்ப்பாணத் தமிழர்கள் நிலை அப்படியில்லை. அவர்கள் அணிஅணியாகப் பெரும்பான்மையாக வாழ்வதால் சிங்களவர்களின் வெறியாட்டத்தை அவர்களால் சமாளித்துக்கொள்ளமுடியும். ஆனால் அவர்களோடு இணைந்து நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை மட்டுந்தான் பார்க்க முடியுமே தவிர விடுதலையை கண்ணால் பார்க்க முடியாது''

### இந்தியாவுடன் இணைந்தால்

கே; இந்தியாவோடு இணைந்த மாநிலமாக இலங்கை வந்தால் உங்களுக்கு விடிவுகாலம் பிறக்குமா?

ப; நிச்சயமாக இருக்காது.. அப்போது கூட சிங்களவர்கள் வகுப்பு வாதத்தை உண்டு பண்ணிவிடுவார்கள். எங்களைப் பொறுத்தவரை இந்திய வம்சாவழி தமிழர்கள் 16 லட்சம் பேரை இந்தியா ஏற்றுக் கொண்டால்தான் எங்களுக்கு விடிவுகாலம். அது இல்லாத வரை நாங்கள் நாடில்லாத அனாதைகள். அப்படி எங்களுக்கு தமிழகத்தில் இடம் இல்லையென்றால்கூட கச்சதீவு அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அனுப்பலாம். அந்த இடங்கள் எங்களுக்கு பழக்கமானவை. கோப்பி, தேயிலை தோட்டங்களை அங்கே உண்டு பண்ணி அந்தப் பகுதிகளை தொழில் வளமாக்க முடியும். நான் முன்பே சொன்னேன், எங்களுக்கு சர்வதேச அளவில் நிதி உதவி செய்ய பல நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன என்று.''

கே; நீங்கள் இலங்கையை விட்டு வெளியேறுகிற எண்ணம் மட்டுமே உடையவராக இருந்தால் தமிழினம் உங்களை சுயநலவாதப் போக்குடையவர்கள் என்று அழைக்க ஆரம்பிக்குமே?

'மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எங்களால் வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. நாங்கள் தமிழீழம் பெறுகிற முயற்சியில் ஈடுபட்டால் அடியோடு நசுக்கப்பட்டு விடுவோம். 16 லட்சம் தமிழர்களும்பரிதாபகரமாக உயிர் இழக்கிறதை இந்திய அரசு விரும்புமா என்பது எங்களது கேள்வி'

### அமிருடன் சேர்ந்தாலென்ன

கே: நீங்கள் ஏன் அமிர்தலிங்கத்தின் இயக்கத்தோடு இணைந்து செயல்பட மறுக்கிறீர்கள்?

'நாங்கள் அவரை வெறுக்கவில்லை, அவரையும் தமிழர் தலைவராகவே நினைக்கிறோம்.

(9ம் பக்கம் பார்க்க)




## வடமுனை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னறுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே வடமுனையில் அத்துமீறிக் குடியேறியுள்ளார்கள் என்பதைப் படித்தது ஞாபகம் வந்தது.

ஆரியவுடன் நண்பர் டக்ளஸும் நானும் ஜீப்பை ஒரு புறத்தில் நிறுத்திவிட்டு இறங்கி நடக்கலானோம். குடியேற்றத்தினுள்ளே செல்லாது ஓரளவு தூரத்தில் பார்க்கக்கூடிய இடம் வரை சென்றோம். எம்முடன் வந்த ஏனைய மூவரும் ஜீப்பினுள்ளே இருந்தனர்.

ஆரிய எமக்கு ஒரு உல்லாசப்பயண வழிகாட்டி போல சகலதையும் விளக்கிக் கொண்டுவந்தார். மழைத் தூறல் தொடர்ந்துகொண்டே இருந்தது. ஆயினும் நாம் அதனைப் பொருட்படுத்தாது வடமுனைக் குடியேற்றத்தை அலசுவதிலேயே கண்களை விட்டோம்.

''ஆரிய, இங்கு வந்துள்ளவர்கள் பற்றிக் கொஞ்சம் கூறுவீர்களா?'' என்றேன்

''ஆம்'' என்றவர் அருகே நின்ற மரமொன்றின்கீழ் அழைத்துச் சென்று தமது கதையைத் தொடர்ந்தார்.

'இங்கு வந்திருப்பவர்களில் அநேகர் காணிகளற்றவர்கள் இவர்களை அழைத்து வருவதில் வண திம்புலாகலவுடன் சில முதலாளிமாரும் சேர்ந்திருந்தனர்.'

### வெளியேறுவார்களா?

'இங்கிருந்தும் இவர்கள் வெளியேற மாட்டார்களா?' என்றேன்.

'என்னைப் பொறுத்தவரை அவர்கள் வெளியேற மாட்டார்கள் என்றே தோன்றுகிறது. இங்கு வந்திருப்பவர்கள் மிகவும் உறுதியுடன் இருக்கிறார்கள். நீங்களும் பாருங்களேன். இந்த அடர்ந்த காட்டில் இவ்வளவு கொட்டில்களையும் எவ்வளவு சிரமத்துடன் நிலத்தைச் துப்பரவு செய்து பொட்டிருக்கிறார்களென்று.

இங்கு இப்போ மனிதர்கள் வாழக்கூடிய நிலையில்லை. மலேரியா நோய் அபாயம், சுத்தமான நீரில்லாதநிலை, போன்றவற்றையும் இவர்கள் சமாளித்து தாம் இங்கையே இருந்துவிடவேண்டுமென்ற உறுதியுடனிருக்கிறார்கள்.

மலேரியா நோய் இவர்களில் சிலருக்குப் பீடித்துள்ளது. வேறுசிலர் சுத்தமான நீரின்மையால் வயிற்றோட்டத்துக்கு ஆளாகியுள்ளனர். இப்படியான சவால்களை சமாளிப்பவர்கள் எப்படி இலகுவில் வெளியேறுவார்கள்?' என்று அவர் என்னிடம் திருப்பிக் கேட்டார்.

நாம் உரையாடிக் கொண்டிருந்த போது ஒரு டிராக்டர் எம்மைத்தாண்டிச் சென்றது. அதன் பின்புறம் இணைக்கப்பட்டிருந்த பெட்டியில் பலர் நின்றுகொண்டிருந்தார்கள்.

### விழுந்து எழுந்தேன்

இவர்கள் புதிதாக வந்து கொண்டிருக்கிறார்களா?' என்றேன். 'இல்லை இவர்கள் ஏற்கனவே வந்தவர்கள். புதியவர்கள் வருவது குறைந்துவிட்டது. தற்போது இங்குள்ளவர்களே வெலிக்கந்த சந்திக்குச் சென்று தமக்குவேண்டிய பொருட்களை வாங்கித் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள் என்றார்.

மழை கனத்தது. ஜீப்பை நோக்கி ஓடினோம். டிரக்டர் சக்கரங்கள் ஆழ வெட்டிச் சென்ற சேற்றுக் குவியலினுள் கால்இடறி விழுந்து புரண்டு மீண்டும் எழுந்து ஓடினேன்.

(தொடரும்)

## மண்டலாபிஷேக விழா

(மானிப்பாய்)

நொச்சியம்பதி விநாயகர் பெருமான் ஆலயத்தில் ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தனமகா கும்பாபிஷேகம்சிறப்பாகநடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் கொக்குவில் ஸ்ரீலஸ்ரீ த.குமாரசுவாமிப்பிள்ளை மகன்சிவஞானவாரிதி, சைவசித்தாந்தக் காவலர் குருசுவாமியினால் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவரை பெரியபுராணப் பிரசங்கம் நடைபெறவுள்ளது.

## இந்துக் கல்லூரியில் உலக தினங்கள்!

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் உலக உணவுத்தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரிஅதிபர் திரு சி.வே.மகேசவேலு சிரேஷ்ட ஆசிரியர் திரு கே.கதிர்காமநாதன், விவசாய ஆசிரியர் திரு கே.நரேந்திரன் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து இரு தினங்கள் மரநாட்டு விழாவை விவசாய ஆசிரியர்களின் மேற்பார்வையில் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்டனர். பல வகையான பயன்தரும் மரங்களும், நிழல்மரங்களும் நாட்டப்பட்டன.

ஐ.நா.தினம் கொண்டாடப்பட்டது. ஐ.நா. அமைப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி அதிபர் திரு சி.வே.மகேசவேலுவும் சிரேஷ்ட ஆசிரியர் திரு சி. எஸ்.அமிர்தலிங்கமும் ஆரம்ப உரை வழங்கினர் இதனைத் தொடர்ந்து வாகீசர்மண்டபத்தில் நடைபெற்ற ஐ.நா. விழாவில் திரு கே.கதிர்காமநாதன் ஐ.நா.அமைப்பின் முக்கிய அமைப்புக்களைப் பற்றியும் சர்வதேச சட்டத்தைப்பற்றியும் சிறப்புரை வழங்கினார்.

ஐ நா.தின அறிவுப்போட்டியென்றை அதிபர் ஒழுங்கு செய்தார். இதில் சிரேஷ்ட வகுப்பு மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## பஸ் விபத்து 60 பேர் பலி!

புதுடில்லி, அக். 28

உத்தரப் பிரதேசத்தின் கான்பூர் மாவட்டத்தில் பஸ் விபத்தொன்றில் சுமார் 60 பேர் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் நேற்று நடைபெற்றது.

ஆற்றின் மேலாகச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டி சாரதியின் கட்டுப்பாட்டை மீறி பாலங்களில் மோதுண்டு ஆற்றினுள் குடைசாய்ந்தது. இதனையடுத்தே மரணங்கள் சம்பவித்தன.

சுமார் 11 பேர்வரை உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஆகாயப் படையினர் இவர்களைக் காப்பாற்றுவதில் இறங்கியிருந்தனர். (கி)

## சேவை நலம் பாராட்டுவிழா

(புலோலி)

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றி பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. எஸ். ஜெயரத்தினத்திற்கு யாழ்.மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலக நலன்புரிச்சங்கம் சேவைநலம் பாராட்டுவிழா நடாத்தவுள்ளது இம் மாதம் 31ம் திகதி திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சிநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவுக்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலக நலன் புரிச்சங்கத் தலைவர் திரு. பொ. சின்னத்துரை மேற்கொண்டுள்ளார்.

## இலங்கைத்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு இப்பொழுது உள்ள வேகத்தில் அப்பொழுதெல்லாம் நடுவண் அரசின் கவனத்தை ஈர்க்காததும் தவறுதான்.

இனியும் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்புத் தருவதில் ஒரு நிரந்தர முடிவை ஏற்படுத்தாவிடில் சரிப்பட்டு வராது! மெத்தனங்கள் இனி மரியாதையை இழந்து விடும்!

அணிசேரா நாடுகளின்அரும் பெரும் தலைவியாகிய - நம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார்இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதாக எந்த வகையிலேனும் வழி செய்ய வேண்டும்!

நாம் இதைச் செய்யவில்லை என்றால் 'இந்தியா கையாலாகாத நாடு; அவர்கள் வம்சாவளியினரையும், அவர்கள் நாட்டின் மொழி ஒன்றைப் பேசும் அண்டை நாட்டுக்காரர்களையும் கூடக் காப்பாற்றத் திராணியற்றது' என்று உலகம் நம்மைக் கேலி பேசும்!

''தமிழர்கள் கௌரவமாக வாழ வழிகோலுவது எமது பொறுப்பு'' என்று அன்னை இந்திரா ஜெயவர்த்தனவை வற்புறுத்த வேண்டும். 'இது செய்யவில்லை என்றால் உடன் எங்கள் இராணுவம் வரும்' என்று தைரியமாகத்தெரிவிக்க வேண்டும்.

இது இந்தியாவின் கௌரவப் பிரச்னை!

இது மனிதாபிமானப் பிரச்னையும்கூட!

குற்றுயிரும் குலையுயிருமாய் இருப்பவர்களுக்குக் கோதுமை அனுப்பி விடுவதினாலோ கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் கப்பல் விடுவதினாலோ நிரந்தரப் பரிகாரம் ஏற்பட்டு விடாது. அவை தற்காலிக நிவாரணங்கள்!

இப்பொழுது தமிழகமும், இந்தியாவும் இந்திரா செய்ய வேண்டியதாக எதிர்பார்ப்பது நிவாரணங்களை அல்ல. பரிகாரங்களைத்தான்.


# இன்றும் —— நாளையும்

மு. ப. 9-00 மணி முதல் பி. ப. 5. மணி வரை

# ஆர்பிகோ காட்சியறைகள்

★ ஹைட்பார்க் கோணர் ★

கீழ்க்காணும் இடங்களில் திறந்திருக்கும்

★ கம்பஹா ★ குருநாகல் ★ இரத்தினபுரி
★ காலி ★ பதுளை ★ மொரட்டுவை
★ மட்டக்களப்பு ★ யாழ்ப்பாணம் ★ மாத்தறை
★ அநுராதபுரம் ★ களுத்துறை ★ கண்டி

★ உருக்கு தளபாடம்-

கதிரைகள் — சுழல் கதிரைகள், சாப்பாட்டு மேசைக் கதிரைகள், மடித்து வைக்கும் கதிரைகள், மெத்தைக் கதிரைகள்.

ரூபா 210/- முதல் ரூபா 5000/- வரை

★ றெடிமேட் ஆடைகள்

அறிமுக விலைகளில்-

ஜில் ட்ரவுஸர்கள் (ஆண்கள்/சிறுவர்கள்) சேட்டுகள்,பேர்முடாஸ், ஸ்கேர்ட்ஸ், பிளவுஸ்கள் மற்றும் பல.

ரூபா 85/-ல் இருந்து மேல்

★ ஆர்ப்பிபோம்-

மெத்தைகள், குஷன்கள், தலையணைகள் மற்றும் பல.

ரூபா 43/-ல் இருந்து ரூபா 1150/-வரை

★ அலுலக உபகரணங்கள்-

மேலதிகாரி மேசைகள், லிகிதர் மேசைகள், தட்டச்சாளர்கள் மேசைகள், நாற்காலிகள், பைல்கபினட்டுகள், வரவேற்பறைத் தளபாடங்கள், வார்ட்ரோப்கள், பார்ஸ்ரூல்கள், கட்டில்கள், மேசைகள்.

விலை ரூபா 975/- முதல் ரூபா 4200/-வரை

★ வீட்டுப் பாவனை பிளாஸ்டிக் பொருட்கள்-

பேசின்கள், வாளிகள், இனிப்புப் பண்டங்கள் போடும் பாத்திரங்கள், கை அலம்பும் கோப்பைகள் - தட்டுக்கள், தம்ளர்கள், டஸ்ற் பான்ஸ், பிக்னிக் கூடைகள்.

ரூபா 4/ல் இருந்து ரூபா 98/-வரை

## சலுகை விற்பனைச்சாலை

(ஹைட் பார்க் கோணர் மட்டும்)

★ சலுகைக் கட்டணத்தில்-

ஸ்ரீல் நாற்காலிகள், லேற்றெக்ஸ்போம் தயாரிப்புகள், ஆர்ப்பிபோம் தயாரிப்புகள், தோல் துணி, றிஜிபோம் விற்றுமுடிக்க சலுகை விலையில்

ரூபா 2/- முதல் ரூபா 2000/-வரை

ARPICO

# றிச்சார்ட் பீரிஸ் அன் கம்பனி லிமிட்டெட்

# SCIENCE ACADEMY

310, CLOCK TOWER RD., JAFFNA.

A/L 85 பிரிவிற்கு பொது இரசாயனம்

ஆரம்பம் 05-11-83 சனிக்கிழமை

ஆசிரியர்-திரு. சத்தீஸ்

A/L 84/85 வகுப்புக்களுக்கு
பௌதிக வகுப்புகள் நடைபெறுகின்றன

திரு. தவா, திரு. சிறிதரன் (வடபகுதி பிரபல ஆசிரியர்கள்)
திரு. சுந்தரமூர்த்தி (கொழும்பில் பிரபல ஆசிரியர்)

மாணவர்களின் நலன்கருதி மணியம் வெளிநாட்டுப் பயணத்தை இரத்துச் செய்துள்ளார். சகல வகுப்புக்களுக்கும் 05-11-83க்குள் சேர்ந்து பாடவிதானத்தை முழுமையாக முடிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## சயன்ஸ் அக்கடமி

310, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.



## யாழ். மக்களுக்கோர்
## மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

## குறேஸ் ட்ரவல் சேர்விசஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்

1. கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும், மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நோர்வேயில் (NORWAY) 1984-ம் ஆண்டிற்கான பாடசாலை அனுமதி பெறுவதற்கும் அது தொடர்பான சகல ஏற்பாடு களுக்கும் உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA
PHONE: 22065, 22040

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

நகல் படிவங்களை;

1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3. சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?

Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-

1. Minolta PPC Photo Copier Model EP 300 78,590-00
2. Minolta PPC Photo Copier Model 300 RE 88,600-00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குறேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்)
படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக் கூடிய இடம்

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்


## ஐ.நா.வில்தி.மு.க.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதை அரசாங்கம் மன்னித்துவிட்டது. என்பதை அரசின் பெரிய அமைச்சர்களுள் ஒருவர் அகதிகள் முகாம் ஒன்றில் கூறியகூற்றுகாட்டுகிறது. வெலிக்கடைச் சிறைப்படுகொலைகளுக்குப்பின் சிங்கள மக்கள் அமைதி கண்டனர் என்பது அவர் கூறிய கூற்றுகும். இதைநேரிற்கேட்டபலர் சான்றளிக்கத் தயாராயுள்ளனர்.

## வடமுனை விவகாரம்

''கிழக்கு மாகாணமானமட்டக்களப்பில் உள்ள வடமுனை என்ற இடத்துக்கு 1983 செப்டம்பர் முதல் வாரத்தில் அரசாங்க வாகனங்களில் 700சிங்களவர் சென்றுள்ளனர். அவர்கள் 1977ம் ஆண்டின் கலவரங்களுக்குப்பின் மலைத்தோட்டங்களிலிருந்துகுடிபெயர்ந்துவந்து அங்குவாழும் இந்திய வம்சாவழியினரைத் தாக்கினர் படைஎடுத்துவந்த சிங்களவர் 30 குடும்பங்களை அடித்து துரத்திவிட்டு அவர்களது உடமைகளை (வீடு நிலம் முதலியவற்றை) ஆக்கிரமித்துக்கொண்டனர்.

''ஊவாத் தொகுதி எம். பி. யான ஆளும் கட்சிக்காரர் தலைமையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று தமிழர் தலைவர்கள் கூறுகிறார்கள்.''

''பின்னால் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக உத்தரவொன்றின்மூலம் தமிழர்களுக்குச் சொந்தமான நாசமடைந்த கைவிடப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் இலங்கை அரசாங்கமே எடுத்துக்கொண்டுவிட்டது.''

''செல்வாக்குள்ள அமைச்சர்கள் சிலர் விடுத்திருக்கும் பத்திரிகைச் செய்திகள் அரசாங்கம் தமிழர்களுக்குச்சொந்தமான தொழில்களையும் வணிகங்களையும் அசையாச் சொத்துக்களையும் கவர்ந்து பின்னர் அவற்றைச் சிங்களவர்களுக்குத் தரப்போகிறது. அதன் மூலம் ''இலங்கை பொருளாதாரத்தில் மொத்த உச்சியில் தமிழர்கள் விஞ்சியிருக்கும் நிலைமை கடந்தகாலக் கதையாகிவிடும்'' என்பதையே காட்டுகின்றன.''

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

''இது தமிழர்களுக்கு ஆதாரங்களையும் வாழ்க்கை வழி வகைகளையும் வருவாயை அனுபவிக்கும் உரிமையையும் அடக்கும் நோக்குடன்- அவர்களது சொத்துக்களை எதேச்சாதிகாரமாகப் பறிக்கும் செயலேயாகும்!''

''இத்தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அறிக்கையையும் சுட்டிக்காட்டுவது தொடர்புள்ளதாகும்! இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இந்தியவம்சாவளியினரான தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். அவர்கள் பத்து லட்சம் பேராவர். அக்கட்சி அரசாங்கத்தில் ஓர் உறுப்பாயுள்ளது. அதன் சார்பில் ஒருவர் அமைச்சராக உள்ளார். இத்தகு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்திய வம்சாவளியினரான பத்து லட்சம்தமிழர்களும், இலங்கை அரசு தமது உயிர்களுக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்புத் தரமுடியாதிருப்பதால்- தாம் இந்தியாவுக்கே திரும்ப அழைத்துக் கொள்ளப்படவேண்டுமென்று விரும்புகின்றனர் என்றுஅறிக்கைவிட்டுள்ளது.''

''வேண்டுமென்றே திட்டமிட்டு இனப்படுகொலை நடத்துவதால் அந்தப் பத்து லட்சம் தமிழர்கள் கொண்டுள்ள உண்மையான அச்சம் ஐ. நா. அவையால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.''

(தொடரும்)

## நூல் அறிமுகம்.
### கேதார கௌதாரி விரதம்

சைவசமயம் ஆங்காங்கு சங்காபிஷேகம், கும்பாபிஷேகம், விரதங்கள் என்று வளர்ந்து வரும் இந்தச் சமயத்தில், ''கேதார கௌதாரி விரதம்'' என்னும் இச்சிறு நூலை வெளியிட்டிருப்பது பெரிதும் பயன் தரக்கூடியது.

இக்கால இளம் சமுதாயத்தினர், ஏன் இப்பெயர் வந்தது? அதை முதன் முதல் யார் அனுட்டித்தார்கள்? தேவலோகத்தில் நடைபெற்ற இவ் விரதம் எவ்வாறு பூமிக்கு வந்தது? என்று கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் தக்க பிரமாணத்துடன் இந்நூல் வெளிவந்துள்ளது. இவ்விரதத்துக்குத் தேவையான பூஜா பொருட்களும்பட்டியலாகத் தரப்பட்டுள்ளது. மணலில் லிங்கம் பிடித்து எவ்விதம் விரதம் இருக்கவேண்டும்? விரதகாலத்தில் இருக்க வேண்டிய நியமங்கள், விரதத்தைமுடிக்கும்முறை, இவைகளெல்லாம் தெளிவாக அரிய தமிழில் விளக்கப்பட்டுள்ளது. முன் அட்டைப்படத்தை அம்பிகை முதலிய தெய்வங்கள் அலங்கரிப்பதுடன், புத்தகத்தின் பின்அட்டையில் தபோ விரதங்கள் அனுட்டித்துச் சமாதி எய்திய கடையிற் சுவாமி அவர்களின் திருவுருவப்படம் போடப்பட்டிருப்பது, விரதத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தும் விதமாக அமைந்துள்ளது. சைவமக்களுக்கு எழுதி உதவிய நியாயசிரோன்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகளும், இதை அச்சேற்றி வெளியிட்டு உதவிய திரு. வே. சுப்பிரமணியன்செட்டியாரும், இப்புத்தக நிதியைக் கடைச்சுவாமி திருப்பணிக்கு உதவியிருப்பது நாம் எல்லோரும் வரவேற்கத்தக்கதுடன் நாமும் அக்கோவிலுக் இயன்ற உதவியைச் செய்வதுடன் இந்தப்புத்தகத்தை வாங்கி ஊக்கமளிப்போமாக. இந்த நூலின் விலை ஐந்து ரூபா கிடைக்குமிடம் 41, கடையிற் சுவாமி சமாதிக் கோவில், கடையிற் சுவாமி வீதி, நீராவியடி.

— பக்தன்

## அமெரிக்க, பிரிட்டன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

த்து அமெரிக்கர்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அவர்கள் றீகன் நிர்வாகத்தைப் பலமாகக் கண்டித்தனர்.

ஐ. நா. விலும் கிரனடா விவகாரம் சூடு பிடிதுள்ளது. அமெரிக்கப் பிரதிநிதி திருமதி. ஜீன் கேக் பட்றிக் கிரனடாவில் அமெரிக்கப் படைகளின் படையெடுப்பு நியாயமானதே என வலியுறுத்தி வருகிறார்.

(கி)

## கிரனடாவை

(3-ம் பக்கத் தொடர்சி)

ஆக்கிரமிப்பு நோக்கம் வெளியானது. இப்பாசறையிலிருந்து பல சோவியத், கியூபா இராணுவ சாதனங்கள் கைப்பற்றப்பட்டன.

கிரனடாவில் புதிய விமான நிலையமொன்றை கியூபாவின் தொழிலாளர்கள் அமைத்து வந்தனர். அவர்கள் மூலமாகவே கியூபா தனது எண்ணத்தை நிறைவேற்றவிருந்தது'' என்றார்.

இதேவேளை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு கிரனடாவில் பெரும்பாலான இராணுவ நிலைகள், மற்றும் அமெரிக்க பாடசாலையொன்று பல்கலைக்கழகம் உட்பட நிர்வாக நிலையங்கள் பலவற்றை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கிரனடாவிலுள்ள அமெரிக்கர்களும் அமெரிக்கா கொண்டு வரப் படுகின்றனர். பெரும் ராட்சத போர் விமானங்கள் இராணுவ சாதனங்களை கிரனடாவில் இறக்கிவிட்டு மீண்டும் அங்கிருந்து அமெரிக்கப் பிரஜைகளை கொண்டு வருகின்றன.

(கி)

1-11-83 வரை
ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் பார்க்கிறார்கள்! நீங்கள் ஏன் இன்னமும் பார்க்கவில்லை? கடைசி வாரமாகவும் பார்க்காதவர்களுக்கு இது ஒரு கடைசி சந்தர்ப்பமாகவும் காட்சியளிக்கின்றது. இன்றே இப்பொழுதே பார்த்து மகிழுங்கள்.
றீகல் (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
Next:
FROM HERE TO ETERNITY

இன்னும் 5 தினங்கள் மட்டும்
மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
"RAID ON ENTEBBE" in
**Operation Thunderbolt**
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.

லிடோ யாழ் நகர்
தினசரி
10-30, 2-15 6 30.
**விடியும்வரை காத்திரு**

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-30
30-10-83 வரை
கமல் ஸ்ரீதேவி **குரு**
7 11-83 முதல்
36th CHAMBER OF SHAOLIN

வின்ஸர் (யாழ். நகர்)
29-10-83 முதல்
தினசரி 10-30 2-30 6-15
கலைஞர் கருணாநிதி அவர்களின் கைவண்ணத்தில் உருவாகி முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களின் ஒப்பற்றநடிப்பால் ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற உன்னத தீந்தமிழ் திரையோவியம்
எம். ஜி. ஆர். - பத்மினி
வீரப்பா
தங்கவேலு - ராஜசுலோசனா
நடித்த
**அரசிளங்குமரி**
(புத்தம் புதிய பிரதி)


## பிழைப்புக்காக...

(6-ம் பக்கத் தொடர்ச்சி

இந்திய வம்சாவழி தமிழர்கள் அமிர்தலிங்கத்துக்கு ஆதரவாக கிளம்பினால், சிதறுண்டு வாழும் இந்திய வம்சாவழி தமிழர்களை சிங்களவர்கள் அழித்து விடுவார்கள். எங்கள் உயிருக்கு இப்போது பயங்கரமான ஆபத்து சூழ்ந்து இருக்கிறது. மொத்தத்தில நடுக்கடலில் சிக்கி தவிப்பவர்களை போல இந்திய வம்சாவழி தமிழர்கள் (தோட்டங்களில் பணி புரிகிற தமிழர்கள்) வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'

கே: இந்த நிலையில் ஜெயவர்த்தன அமைச்சரவையில் தொண்டமான் மந்திரியாக இருப்பது வெட்கமாக இல்லையா?

ப: 'நாங்கள் நீருக்கும் நெருப்புக்கும் இடையில்நின்று திணறிக் கொண்டிருக்கிறோம். தொண்டமான் கூட என்ன செய்வதென்று தெரியாது குழம்பி போயிருக்கிறார். அவர் ராஜினாமா செய்தால் அவரால் 16 லட்சம் தமிழர்கள் அதுவும் இந்திய வம்சாவழி தமிழர்கள் தாக்கப்பட நேரிடும். அதனாலேயே மௌனமாக இருக்கிறார். எங்களின் எண்ணத்தை சரிவர புரிந்து கொண்டு பிரதமர் இந்திராவும் காக்டர் புரட்சித் தலைவரும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் தமிழினம் காப்பாற்றப்படும்.'


(கடைசி வாரம்)
ராணி (யாழ் நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**

லதா (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
**கீழ்வானம் சிவக்கும்**

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
M.G.R. - சரோஜாதேவி
**அன்பே வா**
கலர் — புதிய கொப்பி
From 1-11-83
"IT COULD HAPPEN TO YOU"
A Film on V. D.

சாந்தி யாழ்நகர்
10.30, 2.30, 4-45, 7-00.
Clint Eastwood in
ANY WHICH WAY YOU CAN
(Color)
Action Thrill

கடைசி இரு தினங்கள்
ராஜா [யாழ்.நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]
31-10-83 முதல்
**வீரக்கனல்**


# பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர் விபரம்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துவந்த 2268 தனியார் துறை ஊழியர்களில், 994 விற்பனையாளர்களும், 196 முகாமையாளர்களும் இருக்கின்றனர்

தொழில் பிரதி ஆணையாளர் திரு. சிவா. பாஸ்கரன் மேற்கண்ட விபரத்தை நேற்று முன்தினம் யாழ். நகரமண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்ட தனியார்றுறை ஊழியர் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த விபரங்களில் பாதிக்கப்பட்டவர்களில் கீழ்க்காணுவோர் இடம்பெற்றிருந்தனர்.

பொறியியலாளர்-17, செயலாளர்-2, நிர்வாக அதிகாரி-2, கணக்காளர்-31, வைத்திய ஆலோசகர்-2, கட்டடக்கலைஞர்-1, மருந்துக்கலவையாளர்-2, வரைபட நிபுணர்-5, ஆய்வுகூட உதவியாளர்-2, பகுப்பாய்வாளர்-1, நில அளவையாளர்-1, கப்பல்துறை உதவியாளர்-1, தொழில் நுட்பவியலாளர்-9, வைத்திய ஆய்வுகூட உதவியாளர்-1, அச்சுக்கோப்பாளர்-1, தரக் கட்டுப்பாட்டாளர்-3, ஒப்பு நோக்காளர்-1, ஆலைக்கண் காணிப்பாளர்-1, மீன்பிடி இயக்குநர்-1, கமரா ஒப்பரேட்டர்-2, ஓவியர்-1, பயிலுனர்-5, வெல்டர்-1, திட்ட இயக்குநர்-1, செக்கர்-1, சுருக்கெழுத்து / தட்டெழுத்தாளர்-37, இயந்திர இயக்குநர்-13, கணக்குப் பகுதி லிகிதர்-162, லிகிதர்-90, களஞ்சியப் பொறுப்பாளர்-28, காவல்காரர்-12, 'ரெலக்ஸ்' இயக்குநர்-2, ஜூக்கி யந்திர இயக்குநர்-1, மோட்டார் மெக்கானிக்-1, கம்பியூட்டர் இயக்குநர்-8, ரிங்கர்-1, தையல்காரர்-1, பத்திரிகை ஆசிரியர்-1, மின்சார ஊழியர்-4, தொழிற்சாலை உத்தியோகத்தர்-1, அச்சு யந்திர இயக்குநர்-1, பிட்டர்-2, மெசின்மைன்டர்-1, மேற்பார்வையாளர் முகாமி-37, காசாளர்-172, சாரதிகள்-11, ஆபரண தொழிலாளி—1, ஆசிரியர்—21, சிகை அலங்கரிப்பு நிலையதொழிலாளர்—125 சமையல்காரர்—22, கூலியாட்கள்—68, கோவில் பூசகர்—2, தொழில் ஆலோசகர்—1, வானொலி தொழில்நுட்பவியலாளர்—3, பயர்மென்—1, சுருட்டுத் தொழிலாளி—5, அற்றென்டன்—1, தியேட்டர் பரிசோதகர்—1, பாதுகாப்பு உத்தியோகத்தர்—11, பின்டர்—1, வியாபாரிகள்—41, 'மொனோ' யந்திர இயக்குனர்—1, 'லிதோ பிறிண்'டர்—1, ஓட்டுநர்—1, நெசவாளர்—5, உடைகள் பயற்றுநர்—1.

திரு. சிவபாஸ்கரன் மேலும் தெரிவிக்கையில் 70 ஊழியர்கள் எந்தப்பிரிவிலும் சேர்க்கப்படாதவர்களாக இருப்பதாகவும் கூறினார்.

நீண்டகாலப் பயிற்சியும், அனுபவமும் பெற்றுள்ள இவர்களுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தொழில் அதிபர்களும், வர்த்தகர்களும், வேலை வழங்க முன்வந்தால் பெரும் உதவியாக இருக்கும் என்றும் கூறினார். (க)

## நூல் விமர்சனம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டாக "கூழைப்பலவின் கனிகண்டு குதித்த மந்தியரு கோடி கொண்டு பூந்தண் பொதும்பரிடைக் கோலாகலமாய் மடியிருத்தித் தாழைக் குருத்தின் எயிறிலங்கப் பிளந்து வளைந்த கூர் உகிரால் தண்டைக்குடைந்து பொற்சுளையைத் தடவி எடுத்து..." என்னும் பாடலைக் குறிப்பிடலாம்.

முப்பது வருடங்களுக்கு முன்னரே, ஈழத்துப் பத்திரிகைகளிலும், ஆனந்தவிகடன் போன்ற இந்தியப்பத்திரிகைகளிலும் கவிதைகள் எழுதிப் புகழ்பெற்றவர் இந்நூலாசிரியர் பழைய தலைமுறையைச் சேர்ந்த இவர் எழுதிய இந்நூலில்புதுமைமணம் கமழ்கின்றது.

பண்டிதமணிஐயா அவர்கள் சுந்தரர் பிள்ளைத்தமிழ் பற்றிக் குறிப்பிடும்போது 'பாடாமல் இருக்கமாட்டாமை பிறந்து, பிறந்தது சுந்தரர் பிள்ளைத் தமிழ்' என்று குறிப்பிட்டுள்ளார். இதுவொன்றே இந்நூலின் பெருமைக்கும், ஆசிரியரின் சிறப்புக்கும் போதுமானது.

காரை. செ. சுந்தரம்பிள்ளை

## சிறப்பாக நடந்த பாலர் பாடசாலை கலைவிழா

(மட்டுவில்)

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தின் அனுசரணையுடன்நடாத்தி வரும் சங்கத்தானைப்பாலர் பாடசாலையின் 3ஆவது ஆண்டு விழாவினையொட்டி கலைவிழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு சி.வ. வைத்திபலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு சமூகசேவையாளர் திரு மு.தா. சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர் பேசுகையில் இப்பாலர் பாடசாலையின் கட்டடமும் மற்றும் சாதனங்களும் வளர்ந்து வரும் இப்பாடசாலைக்கு உகந்ததாக இல்லாமல் இருப்பதால் அதனைச் சீர் செய்து சகல வசதியையுடைய ஓர் பாலர் பாடசாலையாக்க ஏற்ற நிதி உதவியை தான் வழங்குவதாக உறுதி அளித்தார்.

சங்கத்தானை சனசமூக நிலையத்தலைவர்திரு சி.வ.சிவக்கொழுந்து, சங்கத்தின் இயக்குனர் சபைஉறுப்பினர் ஆசிரியர் திரு த.சிதம்பரப்பிள்ளை, வட்டாரக் கல்வி அதிகாரி திரு சி.கமலநாதன் சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் திரு க.க.தியாகராசா, ஆகியோர் பாடசாலையின் வளர்ச்சி பற்றியும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய ஆக்க பூர்வ முயற்சி பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர்.

பாடசாலை மாணவர்களுக்கு திருமதி மு.தா.சுப்பிரமணியம் பரிசில்கள் வழங்கினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் 'இலங்கை வானொலி' பி.வி. பிச்சையப்பாவின் புதல்வனின் புல்லாங்குழல் கச்சேரியும் இடம் பெற்றது. பாடசாலை ஆசிரியையான செல்வி இ.கந்தையா நன்றியுரை கூறினார்.

# இன்றைய பலன்

ஐப்பசி 12-ம் திகதி
சனிக்கிழமை
(29-10-83)

மேடம்: பூமி விருத்தியுடன் புதிய தொடர்புகளும் பெருகும் அரசாங்க ஊழியராயின் உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு வெளியிடத்தில்இருந்து வரவேற்கத்தக்க செய்தியுண்டு

இடபம்: இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும் எதிர்பார்த்த பொருள் வரவுண்டு பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தேடித்தரும்.

மிதுனம்: மனக்கவலை உருவாகும் கடமையில் தடை ஏற்படும் மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ளுவீர் மதுபானத்தைத் தவிர்த்துக்கொள்வது விரும்பத்தக்கது.

கடகம்: உள்ளத்தின் அடித்தளம் ஊமைக் கண்ணீர் வடிக்கும் வாழ்க்கையில் தனிமரமாகிவிட்ட எண்ணம் உருவாகும் எதையும் தாங்கும்இதயம் வேண்டும்.

சிங்கம்: சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள் சொகுசான வாழ்வும் கிடைக்கும் மாணவர்களாயின் கல்வியில் முன்னேற்றமுண்டு.

கன்னி: ஏக்கத்தின் சாயல் நிழல்போல் தொடரும் சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வேதனையைத் தரும் முற்கோபத்தினால் கலகங்களும் தோன்றக் கூடும்.

துலாம்: புதிய சண்டுபிடிப்புக்களில் அதிக ஆர்வம்காட்டுவீர்கள் விஞ்ஞானத் துறையில் ஈடுபடுபவர்கள் பாராட்டப்படுவார்கள் தொழில் புரியும் இடத்தில் உயர்ந்த அந்தஸ்து உண்டு.

விருச்சிகம்: துள்ளி வரும் வெள்ளிப் பணம் புதிய நண்பர்களைக் கொண்டுவரும் மக்கள் பணியே மகேசன் பணியாகக் கருதுவீர்கள் அறவழி மூலம் மற்றவர்களின் ஆதரவு உண்டு.

தனு: பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர் தற்பெருமைக்காக தவறான பாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடும் தொழில் துறையில் தயக்க நிலை தென்படும்.

மகரம்: சமயோசிதமான நடவடிக்கைகளின் மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள் இல்லறத்தில் அமைதி நிலவும் ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றியவை முடிவில் இலகுவாகும்.

கும்பம்: வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை காணப்படும் சிக்கல்கள் சிலந்திவலைபின்னும் தவறான பாதையில் பணம் செலவாகும் நண்பரின் கடிதம் வேதனையைத் தரலாம்.

மீனம்: பிதா வழி மூலம் பொருள்வரவுண்டு புதுமனை கட்டுவதற்கு இன்று ஆலோசனை நல்ல முடிவைத் தரும் மாணவர்களின் கல்வியில் பெருமை உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை




# தனியார் வைத்தியசாலையில் தாதிகளுக்குப் பயிற்சி!

## புதிய திட்டம் விரைவில் அமுல்

[யாழ்ப்பாணம்]

தனியார் வைத்தியசாலைகளிலும் தாதிகளுக்குப் பயிற்சி அளிக்கும்திட்டம் ஒன்றை பெண்கள் விவகாரபோதனை வைத்தியசாலைகள் அமைச்சு ஆரம்பிக்கவுள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் பெண்கள் விவகார போதனை அமைச்சில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் கலந்து விட்டு யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

திரு. நச்சினார்க்கினியன் கலந்துகொண்ட கருத்தரங்கில் திருமதி சுனித்திரா ரணசிங்கா பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு அரசில் நிதி பற்றாக் குறை காரணமாகவும் அரசினர் வைத்தியசாலைகளில் பெருகிவரும் வெற்றிடங்களை அவசியம் நிரப்ப வேண்டியிருப்பதாலும் தாதிகளை தனியார் மருத்துவமனைகளிலும் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக சொன்னதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ். மருத்துவமனையில் 110 பிரதமதாதிகளும் 35 வார்ட்டு சிஸ்டர்களும், 5 தாதிகள் போதனாசிரியர்களும் தேவைப்படுவதாகத் தெரிவித்த திரு. நச்சினார்கினியன் தற்போதுதாதிகள் பயிற்சிக்கல்லூரியில் சித்தியடைந்து வெளியூர்களுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ள சகல பிரதம தாதிகளையும யாழ் வைத்தியசாலையில் நிரந்தரமாகக் கடமையாற்ற அனுமதிக்க வேண்டுமென அக் கருத்தரங்கில் தான் கேட்டுக்கொண்டதாகவும் சொன்னார். (மா)

# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்தில், தொலைபேசித் தொடர்புச் சேவை இப்பொழுது எப்படி இருக்கிறது?

அன்று, யாழ். — கொழும்பு தொலைபேசி 'புக்' செய்தால், எட்டு மணி நேரம் என்பதுதான் வழக்கமான பதில். இன்று — நேரடித் தொலைபேசிச் சேவை. எண்களைச் சுழற்றினால் போதும். இலங்கை நமது கையில். ஆனால் எல்லோருக்கும் இது முடியுமா? வீட்டில் தொலைபேசி இல்லாவிட்டால் தபால் அலுவலகத்துக்குத்தான் செல்லவேண்டும். ஆனால்; தப்பித் தவறி யாழ். பிரதம தபால் அலுவலகத்துக்கு மட்டும் போய்விடாதீர்கள். ஏன் தெரியுமா?

தந்தி, தொலைபேசி, விசாரணைக் கருமபீடம் இப்பொழுது இங்கு நிம்மதியாகத் தூங்குகிறது!

இங்கு அண்மையில் கொள்ளை நடந்ததும் நடந்தது தான். மக்கள் சேவை ...... கிலோ என்ன விலை என்று கேட்கப்படுகிறது. மேலும் விபரம் கேட்டால் ......... .

''பொலிஸ் அறிக்கை வந்தால்தான் தொலைபேசி சேவை தொடரும்......'' என்று பதிலளிக்கப்படுகிறது!

தர்மிஷ்டம் எங்கு இருந்தாலும் வாழ்க!

— ஊடுருவி

# "யானை, புலி காட்டில் வாழமுடியுமானால் நாட்டில் இரு இனமக்கள் வாழமுடியாதா?"

## அமைச்சர் விமலா கேட்கிறார்

[இரா. உதயகுமார்]

''யானையும், புலியும் காட்டில் ஒன்றையொன்று மோதிக் கொள்ளாது வாழமுடியுமானால், நாட்டில் ஏன் இருவேறுபட்ட இனமக்கள் ஒன்றாகக் கூடிவாழமுடியாது?'' என்று கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா கேட்டார்.

அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு களுவாஞ்சிக்குடி, ஏறாவூர் பகுதிகளுக்கு சென்று பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டார், அப்போது அங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்,

திருமதி விமலா கன்னங்கரா தமதுரையில் மேலும் கூறியதாவது: ''இலங்கை பல இனங்களைக் கொண்ட ஒரு நாடு. இதனை எக்காரணங்கொண்டும் பிரிக்க முடியாது. இங்குள்ள தமிழ், சிங்கள மக்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும். தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு ஜனாதிபதி ஜயவர்த்தன மீது நம்பிக்கை வைத்திருக்கவேண்டும்.

''இலங்கையை நோக்கி வந்த விமானமொன்று கிரேக்க நாட்டிலும், கப்பலொன்று எகிப்திலும் தடுத்து நிறுத்தப்பட்டன. பயங்கர நோக்கங்களுக்காக இலங்கைக்கு ஆயுதங்கள் அவற்றில் அனுப்பட்டிருந்தன. ஆனால் தெய்வாதீனமாகவே அவை தமது பயணத்தை தொடரமுடியாது சிக்குண்டன. அவை இலங்கை வந்திருந்தால் மிகுந்த நெருக்கடிநிலை உருவாகியிருக்கும்'' என்றார். [கி]

### அளவெட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும்படி உத்தரவிட்டார்களாம். அப்பொழுது உரிமையாளர் கூக்குரலிடவே அயலவர்கள் அங்குவந்ததும் வீட்டுக்கு வெளியில் சீருடையில் நின்றவர்கள் துப்பாக்கியைக் காட்டி அவர்களை விரட்டினார்களாம். அப்போது பின்வாங்கிச்சென்ற அயலவர்கள் கல்லுக் கும்பல் ஒன்றின்மீது ஏறி அந்த நபர்களை நோக்கிக் கற்களால் வீசத் தொடங்கினார்களாம். இதற்கிடையில் இரும்புப் பெட்டி திறக்கப்பட்டதும் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை எடுத்துக்கொண்டு வெளியேறிய இரு நபர்களும், வெளியில் நின்றவர்களுடன் சேர்ந்து ஓடித் தலைமறைவாகிவிட்டார்கள் !கொள்ளையடித்தவர்கள் ஓடும்பொழுது ஒரு சோடி சப்பாத்துக்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

சுன்னாகம் பொலிஸ்நிலைய குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் எம். பேரின்பநாயகம், சார்ஜன்ட் எஸ். துரைசிங்கம் ஆகியோர் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு யாழ் பொலிஸ்நிலையத்திலிருந்து பொலிஸ் நாயும் வரவழைக்கப்பட்டபோதும், கொள்ளை பற்றி எதுவிததுப்பும் கிடைக்கவில்லையாம். (மா)

### மாணவர் வரவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதுவினைஞரின் அறையிலிருந்த மாணவர் வரவு பதியும் இடாப்புக்களில் சிலவற்றை எடுத்துச் சென்றுவிட்டதாக யாழ். பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

**மானிப்பாய் இந்துவில்**

இதே மாதிரி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் இனந்தெரியாத மூன்று இளைஞர்கள் பதிவுப் புத்தகம் இருந்த அறைக்குள் புகுந்து அங்கிருந்த மாணவர் வரவு பதியும் இடாப்புகளில் அதிகமானவற்றை எடுத்துச் சென்றுள்ளதாகக் கல்லூரி அதிபர் யாழ். பொலிஸில் புகார் செய்துள்ளார்.

கைத்துப்பாக்கி வைத்திருந்த மூன்று இனந்தெரியாத அந்த இளைஞர்கள் இடாப்புக்களை எடுத்துக்கொண்டு கல்லூரி மதிலால் பாய்ந்து மூன்று சைக்கிள்களில் ஓடிச்செல்வதாககல்லூரி பியோன் அதிபருக்குத் தெரிவித்த பின்னரே இடாப்புகள் அபகரிக்கப்பட்டது தெரியவந்ததென்று அதிபர் தமது புகாரில் தெரிவித்தார். யாழ். கல்வித் திணைக்களத்திற்கும் அதிபர்கள் இது பற்றித் தெரிவித்துள்ளனர். [மா]

### மகளிர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விபரங்கள் சேகரிக்கவில்லை என்று மகளிர் கல்லூரி அதிபர் ஒருவர் நேற்று தெரிவித்தார். (க)

### அரசாங்க மருந்துகலவையாளர் சங்கக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அரச மருந்து கலவையாளர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளையின் பதின்மூன்றாவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளைக்காலையாழ் நகரில் நடைபெறுகிறது.

### பார்த்தசாரதியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன்.

''இலங்கைத் தமிழர்கள் அவர்களின் இலட்சியங்களை அடைய தமிழ்நாடு அரசு உதவும். தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசு புகலிடமளிக்கும்.

''இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சுமுகமான தீர்வொன்றைக் காண்பார்.

''இலங்கைத்தமிழர் பிரச்னை வேறு. பங்களாதேஷ் பிரச்னை வேறு. பங்களாதேஷில் யுத்தப்பிரகடனம் செய்யப்பட்டு, 9 தினங்களின் பின்னரே இந்தியா அங்கு தனது படையை அனுப்பிவைத்தது'' என்றார். (வெ)

---

## மரண அறிவித்தல்

### இளையதம்பி தங்கம்மா

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவில் வீதி இளையதம்பி தங்கம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும் திருமதிகள் பார்வதி கணபதிப்பிள்ளை, மகேஸ்வரி பதஞ்சலிநாதன் (இளைப்பாறிய ஆசிரியை), நாகம்மா இராசநாயகம் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். பூதவுடல் இன்று சனிக்கிழமை (29-10-83) பிற்பகல் 4-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். 9593

---

## மரண அறிவித்தல்

### திருமதி ராணிநாயகம்அம்மாள் இராசரத்தினம்

காலஞ்சென்ற தெல்லிப்பழை சின்னப்பா இராசரத்தினத்தின் [தெ. சி] அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயரட்ணம், வனராஜா, திருமதி சகுந்தலா திசைநாயகம், காலஞ்சென்ற தர்மராஜா, திருமதி சுலோஜன நவரத்தினம் அவர்களின் அன்புத் தாயாருமாகிய திருமதி ராணிநாயகம் அம்மாள் காலமாகிவிட்டார் அன்னாரின் பூதவுடல் உடுவில் திருச்சபைச் சவச்சாலையில் இன்று 29-10-83 சனிக்கிழமை காலை 9-00 மணிக்குத் தகனம் செய்யப்படும். உறவினர்களும் நண்பர்களும் தயவுசெய்து இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

''ராணிஸ்தான்''
இணுவில், சுன்னாகம்.

(9586)

---

## ரூ. 1,00,000 நகை கொள்ளை!

[திருகோணமலை]

உப்புவெளியிலுள்ள ஒரு தனியார் உல்லாசப் பிரயாணிகள் ஹோட்டலில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பயங்கர ஆயுதங்களுடன் வந்த இரண்டு இளைஞர்களே இக்கொள்ளையை நடத்தியதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மரண அறிவித்தல்.

### திருமதி தங்கம்மா நமசிவாயம்பிள்ளை

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த திருமதி தங்கம்மா நமசிவாயம்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தலைமையாசிரியர் வே. நமசிவாயம் பிள்ளையின் அன்புமனைவியும், அருட்பிரகாசம் (V.K.M. நாகலிங்கம்ஸ், கண்டி), வேல்முருகு (விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் கந்தநயினார், Dr. கந்தசாமி. திருமதி அமுதநாயகி ஆனந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜலட்சுமி, பாலராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், வனஜா, அம்பிகை, மயூரன் ஆகியோரின் பேத்தியுமாவார்:

அன்னாரின் பூதவுடல் இன்று (29-10-83) சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு பழைய இல. 449 நாவலர் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். (9594)

---

## மரண அறிவித்தல்

### க். வேல்மணி

நுணாவில் சந்தி காலஞ்சென்ற பிரபல வைத்திய கலாநிதி கணபதிப்பிள்ளையினதும் திரவியத்தினதும் அன்பு மகன் வைத்தியக் கலாநிதி வேல்மணி 28-10-83ல் காலமானார். இவர் கணேசமணி, சிவமணி, ஆனந்தமணி ஆகியோரின் சகோதரருமாவர் . அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். (9584)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.

6 86 4 71